பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 10 ஞாயிற்றுக்கிழமை (24-03-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:119

## வடக்கு - கிழக்கில்

# ஈ.பி.டி.பியினர் இன்று ஆயுதம் கையளிப்பு!

## யாழ்நகரிலும் வைபவம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

**வடக்கு - கிழக்கில் செயற்படும் ஈ.பி.டி.பி. அமைப்பினர் தங்கள்வசம் வைத்திருக்கும் ஆயுதங்களை இன்று படை அதிகாரிகளிடம் வைபவ ரீதியாக கையளிக்கவுள்ளனர்.**

**தமது அலுவலகங்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அரசுத் தரப்பு வழங்கிய உத்தரவாதத்தை அடுத்தே தாங்கள் ஆயுதங்களைக் கையளிக்க முன்வந்ததாக ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.**

ஆயுதங்களைக் கையளிக்கும் உத்தியோகபூர்வ வைபவங்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இன்று இடம்பெறும் என்று ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது.

யாழ்.ஸ்ரான்லி வீதியில் ஈ.பி.டி.பி. தலைமையகத்துக்கு முன்பாக - வடக்கு புனர்வாழ்வு அமைச்சின் அலுவலகம் முன்பு இயங்கிய கட்டடத்துக்கு அருகே உள்ள மைதானத்தில் இன்று பிற்பகல் 2மணிக்கு ஆயுதக் கையளிப்பு வைபவம் நடைபெறும்.

இந்த வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு சமயத் தலைவர்கள், அரச அதிகாரிகள், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## 10 ஆண்டுகள் நிறைவையொட்டி

## காவல்துறை அணிவகுப்பை தலைவர் பிரபா ஏற்றார்!

வவுனியா,மார்ச்24

தமிழீழக் காவல்துறை ஸ்தாபிக்கப்பட்டு 10ஆவது ஆண்டு நிறைவு பெறுவதை ஒட்டி நேற்று வன்னியில் இடம்பெற்ற அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

வன்னியில் பெயர் குறிப்பிடப்படாத இடம் ஒன்றில் நேற்று மாலை 5 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையில் அணிவகுப்பு இடம்பெற்றது.

அணிவகுப்பு நிகழ்வின் தொடக்கத்தில் தலைவர் பிரபாகரனுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை, புலனாய்வுப் பொறுப்பாளர் ச.பொட்டு அம்மான், நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா மற்றும் படைப் பிரிவுகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் மூவர் நாளை யாழ். வருவர்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக மூன்று அமைச்சர்கள் நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் ஏர்ல் குணசேகரா, சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோரே நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றனர்.

நாளை காலை இங்கு வரும் அமைச்சர்களான ஏர்ல் குணசேகர, ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோர் பிற்பகல் 2மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறும் கூட்டத்தில் பங்குபற்றுவர்.

அமைச்சர்களுடன் அமைச்சு செயலாளர்கள், அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட 47பேர் கொண்ட குழுவும் இங்கு வருகிறது.

அமைச்சர் ஏர்ல் குணசேகர நாளை மாலையே கொழும்பு திரும்புவார்.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா மேலும் இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி

(14ஆம் பக்கம் பார்க்க)

## விவசாய அமைச்சரும் யாழ். வருவார்

வர்த்தக நுகர்வோர் அலுவல்கள் விவசாய அமைச்சர் ரவி கருணாநாயக்கா எதிர்வரும் 6ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

தனது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்தும் குடாநாட்டு மக்களுக்கு அவற்றின் ஊடாக மேற்கொள்ளக்கூடிய நன்மைகள், நிறுவனங்களின் அபிவிருத்தி ஆகியன குறித்து ஆராய்வதற்காகவே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விஜயத்தின்போது குடாநாட்டில் உற்பத்தியாகும் விவசாய மற்றும் உற்பத்திப் பொருள்களைத் தென் பகுதிக்கு எடுத்துச் சென்று சந்தைப்படுத்துவது குறித்தும் அமைச்சர் ஆராய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-6-9)

## கனேடிய ராஜதந்திரி இலங்கை வருகிறார்

கொழும்பு,மார்ச்24

ஆசிய பசுபிக் விவகாரங்களுக்குப் பொறுப்பான கனேடிய இராஜாங்க அமைச்சர் டேவிட் ஏகோன் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு வருகிறார்.

இவர் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மற்றும் நோர்வேயின் சமாதான முயற்சியில் சம்பந்தப்பட்ட அரசியல் பிரமுகர்களைச் சந்தித்துப்பேசுவார். 1995ஆம் ஆண்டின் பின்னர் கனடாவில் இருந்து இலங்கைக்குவரும் முக்கிய ராஜதந்திரி இவராவார். (ஐ-6-9)

## வவுனியா, மட்டக்களப்பில்

## புளொட் உறுப்பினர்களும் ஆயுதங்களை ஒப்படைப்பர்!

வவுனியா,மார்ச்24

வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் செயற்படும் புளொட் உறுப்பினர்கள் தமது ஆயுதங்களை இன்று படையினரிடம் கையளிக்கவிருக்கின்றனர் என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

வைரவப் புளியங்குளத்தில் உள்ள தமது அலுவலகத்தில் இன்று முற்பகல் 11மணிக்கு ஆயுதக் கையளிப்பு இடம்பெறும் என்றும் -

மட்டக்களப்பில் 233ஆவது படையணி அலுவலகத்திலும் ஆயுதங்கள் கையளிக்கப்படும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியினர் ஆயுதக் கையளிப்புக் குறித்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் மாலைதீவில்; நாளை வன்னிக்கு வருவார்

யாழ்ப்பாணம்,மார்ச்24

சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னோடியாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நாளை வன்னிக்கு வரவுள்ளார்.

தனது துணைவியார் அடேலுடன் அன்ரன் பாலசிங்கம் லண்டனிலிருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்டார். அவர் தற்சமயம் மாலைதீவுத் தலைநகர் மாலேயில் தங்கியுள்ளார் என்று செய்திகள் தெரிவித்தன.

மாலேயில் தங்கியுள்ள பாலசிங்கம் அங்கிருந்து புறப்பட்டு இன்று அல்லது நாளை வன்னிக்குச் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாலைதீவில் இருந்து அவர் ஹெலிகொப்டரில் அல்லது சிறிய கடல் விமானத்தில் நேரடியாக வன்னியில் சென்று இறங்கக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுத் தரப்புடன் நடைபெறவிருக்கும் நேரடிப்பேச்சுக்கான முன்னோடி நடவடிக்கைகள் குறித்து பாலசிங்கம் வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் விரிவான ஆலோசனைகளை நடத்துவார். (ஐ-3-6)

## முகமாலை - கிளிநொச்சி இடையே கண்டி வீதியில்

## பயணிகளின் போக்குவரத்தை அவதானிக்க செஞ். குழு சம்மதம்

கொழும்பு,மார்ச்24

குடாநாட்டுக்கான தரைப்பாதை ஏ-9 கண்டி வீதியூடாகத் திறக்கப்பட்டதும் அந்த வீதியில் கிளிநொச்சிக்கும் முகமாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் பயணிகளின் போக்குவரத்தை கண்காணிக்கும் பணியில் ஈடுபட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இணங்கியிருக்கிறது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளும் அரசுத் தரப்பும் உத்தியோகபூர்வமான கோரிக்கையை விடுத்திருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் அர்ச்சுன ரணவன நேற்றுத் தெரிவித்தார்.

இரு தரப்புகளும் கோரியிருப்பதால் இதனை ஒரு மனிதாபிமானப் பணியாக ஏற்று நடுநிலை வகித்துச் செயற்பட செஞ்சிலுவைக் குழு இணங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டதும் படையினர் மற்றும் புலிகளின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சித்திரைப் புத்தாண்டுக்கு முன் ஏ-9 வீதியூடாகப் போக்குவரத்து

### ஏற்பாடுகள் நடப்பதாக அரசுத் தரப்பில் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்24

குடாநாட்டுக்கான கண்டி வீதி (ஏ-9) ஊடான தரைப்பாதை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வைபவ ரீதியாகப் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்படும் என்று அரசுத் தரப்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

முகமாலையில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடைப்பட்ட யுத்த சூனியப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளும் -

முகமாலை, எழுதுமட்டுவாழ் பகுதிகளில் சோதனை நிலையங்கள், பயணிகள் தரிப்பிடங்கள் அமைக்கும் பணிகளும் அடுத்து ஒரு வாரத்தில் பூர்த்தியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பணிகள் முடிவடைந்ததும் புத்தாண்டுக்கு முன்னர் பாதை திறக்கப்படும் என்று அரசுத் தரப்புத் தகவல் தெரிவித்தது.

இதேவேளை -

கண்டி வீதியின் அருகே முகமாலை முதல் யாழ்ப்பாணம் வரையான பிரதேசத்தில் உள்ள பெரிய இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு கால அவகாசம் தேவை என்று படையினர் கோரி

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குடாநாட்டு மின் விநியோகம் ஏப்ரல் மாதமளவில் சீராகலாம்

## ‘கூல் எயார்’ நிறுவன அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.குடாநாட்டுக்கான மின்விநியோகம் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் சீரான நிலையை அடைந்துவிடும். அதற்கான நடவடிக்கைகளை ‘கூல் எயார்’ நிறுவனம் துரித கதியில் மேற்கொண்டு வருகிறது.

- இவ்வாறு ‘கூல் எயார்’ நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் பிரியகுமார் ஹன்டி தெரிவித்தார். கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த இவர் நிறுவனத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்த பின்னர் கொழும்பு திரும்பியுள்ளார்.

கொழும்பு திரும்புவதற்கு முன்னதாக வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சீரானதும் வினைத்திறனுடையதுமான மின் விநியோகத்தை குடாநாட்டு மக்களுக்கு வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன்.

ஆரம்பத்தில் இங்கு கொண்டுவரப்பட்ட 17 ஜெனரேட்டர்களில் ஆக ஏழு மட்டுமே தற்போது ஓரளவுக்கேனும் இயங்கும் நிலையில் இருக்கின்றன. அவைகூட ஏதோவொரு விதத்தில் பழுதடைந்த நிலையிலேயே உள்ளன. சில முழுமையாகவும் பழுதடைந்துள்ளன.

திருத்துவதற்காக இங்கிருந்து கொழும்பிற்குக் கொண்டுசெல்லப்பட்ட மூன்று ஜெனரேட்டர்களில் இரண்டு தற்போது திருத்தப்பட்டுள்ளன. இங்குள்ள ஏனைய ஜெனரேட்டர்களும் பூரணமாக திருத்தப்பட்டால் ஒவ்வொரு ஜெனரேட்டரிலிருந்தும் பெறப்படும் வலு தலா 0.3மெகாவாட்ஸ்கள் வரை அதிகமாக இருக்கும்.

மின்சார விநியோகத்தில் ஏற்படும் சீரின்மையால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை எமது நிறுவனம் பூரணமாக உணர்ந்து கொள்கிறது.

சீரான மின் விநியோகத்தை குடாநாட்டு மக்களுக்கு வழங்குவதற்காக நாம் பலவித இடர்பாடுகளையும் எதிர்நோக்கி வருகிறோம்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் எமது நிறுவனத்துக்கு பல கோடி ரூபாய் பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நாம் காப்புறுதி செய்திருந்தும்கூட இழப்புக்கு காப்புறுதி நிறுவனம் எமக்கு நஷ்ஈடு தர மறுத்துவிட்டது.

இதனால் சுமார் 40 கோடி ரூபா வரையான இழப்பு இன்றுவரை ஈடு செய்யப்படவில்லை.

இவ்வாறான நிலையில் எதிர்காலத்திற்கான ‘அபாயமின்மை உத்தரவாதத்தை’ வழங்கவும் அரசு மறுத்து விட்டது.

தற்போது வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு எமக்கு 40 கோடி ரூபாவை கடனாகத் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளது. அவ்வாறு எமக்கு நிதி வழங்கப்பட்டால் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் நாம் குடாநாட்டு மக்களுக்கு ஓரளவுக்காவது சீரான மின்விநியோகத்தை வழங்க முயற்சி செய்வோம்.

கடந்த 2000 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் இருந்த சீரான மின்விநியோக நிலையினை மீண்டும் கொண்டுவர முடியும் என நம்புகிறேன்.

மிக விரைவில் அரசு புதிய மின் உற்பத்தி நிலையம் (Power house) ஒன்றை சுன்னாகம் பகுதியில் அமைக்கவுள்ளதாகத் தெரிகிறது. அதனை இயக்கும் உரிமையும் எமக்குக் கிடைக்கலாம்.

அந்த வாய்ப்பு எமக்குக் கிடைத்தால் - யாழ்.குடாநாட்டின் சகல பிரதேசங்களுக்கும் நாம் பூரண மின்விநியோகத்தை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

அந்த உற்பத்தி நிலையத்தில் மட்டும் சுமார் 20மெகாவாட்ஸ் மின் சாரத்தைப் பெறமுடியும் எனக் கருதுகின்றேன்.

அதற்கான நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் எடுக்கலாம்.

எமது ‘கூல் எயார்’ நிறுவனத்தில் அரசுக்கோ அமைச்சர்களுக்கோ மற்றும் அரசியல்வாதிகளுக்கோ எவ்வித பங்கு உரிமையும் கிடையாது. இது பற்றி மக்களிடம் சில தவறான தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன. இங்குள்ள ஜெனரேட்டர்கள் பழுதடையும் சமயங்களில் அவற்றுக்கான உதிரிப்பாகங்களைக் கொண்டு வந்து சேர்ப்பிப்பதில் எத்தகைய கெடுபிடிகளை நாம் எதிர்நோக்குகிறோம் என்பது மக்களுக்குத் தெரியும் - என்றார். (ம-9)

## ஹோட்டல் பயிற்சி பாடசாலை திறப்புவிழா

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள மணியம் கட்டடத்தில் செயற்படவுள்ள ஹோட்டல் பயிற்சி நெறிப் பாடசாலையின் ஆரம்பவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே கலந்துகொண்டு பாடசாலையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-10)

## துண்டுவிழும் சரியான தொகை

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 13,540கோடி ரூபா ஆகும்.

வருமானம் 27,820 கோடி ரூபா. செலவினம் 41,360 கோடி ரூபா.

நேற்றைய உதயனில் இந்தத் தொகைகள் மாறுபாடாகப் பிரசுரிக்கப்பட்டுவிட்டன.

வரவு - செலவுத் திட்டத் தொகுப்பு அட்டவணையில் தரப்பட்ட தொகைகளுக்குப் பதிலாக வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளின் தொகுப்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த தொகைகள் நேற்றைய பத்திரிகையில் தவறுதலாக இடம்பெற்றுவிட்டன. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

# ஏ-9 பாதையில் உள்ள கண்ணிகளை அகற்ற நவீன கருவிகள் வருகின்றன

## அமெரிக்கா ஒரு வாரத்தில் அனுப்பிவைக்கும்

கொழும்பு,மார்ச்24

வடக்கில் திறக்கப்படாதுள்ள ஏ-9 பாதையில் உள்ள கண்ணிகளை அகற்றவென நவீன கருவிகள் அமெரிக்காவால் ஒரு வாரத்தினுள் அனுப்பி வைக்கப்படும்.

- இவ்வாறு கூறியுள்ளார் வடக்குப் புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன.

யாழ்ப்பாணம் வந்த அமெரிக்காவுக்கான தென்கிழக்காசிய இராஜாங்க உதவி அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவிடம் பிரதமர்ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளையடுத்தே இலங்கைக்கு உடனடியாக இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

நிலக்கண்ணி, மிதிவெடி அகற்றும் வேலைகளை இராணுவத்தினர் பழைய முறையிலான குறைந்தளவு உபகரணங்களின் உதவியுடனேயே அகற்றி வருகின்றனர். இவ்விடயத்தை நேரில் பார்வையிட்ட கிறிஸ்ரினா றொக்காவிடம் பிரதமர் மேற்படி உதவியினைக் கேட்டிருந்தார்.

நவீன தொழில்நுட்பம், நவீன உபகரணங்கள் இருப்பின் ஏ-9 பாதை உள்ளிட்ட ஏனைய பகுதிகளிலான கண்ணிவெடிகள், மிதிவெடிகளை உடனடியாக அகற்றி பாதை திறப்பு, மீள்குடியேற்றம் போன்றவற்றை துரிதப்படுத்தமுடியும் எனவும் பிரதமர், றொக்காவிடம் குறிப்பிட்டிருந்தார்.

இவ்விடயத்தை கவனத்தில் எடுத்த அமெரிக்கா இலங்கைக்கு உடனடியாக கண்ணி அகற்றும் நவீன கருவிகளை அனுப்பவுள்ளது. (ம-5)

## தெருச்சண்டை மற்றும் பெண்களோடு சேஷ்டை புரியும் இளைஞர்களுக்கு விடுதலைப் புலிகள் எச்சரிக்கை!

### யாழ்நகரில் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

வீதிகளில் பொதுமக்களோடு குறிப்பாக இளம்பெண்களோடு சேஷ்டை புரியும்இளைஞர் கோஷ்டியை எச்சரிக்கும் துண்டுப்பிரசுரம் ஒன்று நேற்று யாழ்நகர்ப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தது.

யாழ்நகரப் பகுதியில் உள்ள ஒரு முக்கிய சந்தியில் தெருச்சண்டைகள் மற்றும் சேஷ்டைகளில் ஈடுபடும் இளைஞர் கோஷ்டி ஒன்றின் நடவடிக்கைகளைக் குறிப்பாகச் சுட்டியே இந்தப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பிரிவினரின் பெயரில் ஒட்டப்பட்டிருந்த அந்தப் பிரசுரங்களில் இளைஞர் கோஷ்டி ஒன்றைச் சேர்ந்தோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் புரிந்த அடாவடித்தனங்கள் பற்றியும் அதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. (ஐ-6)

## விடுதலைப் புலிகளை வரவேற்று கரையோரப் பகுதிகளிலும் பதாகைகள்

விடுதலைப் புலிகளை வரவேற்கும் பதாகைகள் யாழ்.கரையோரப் பகுதிகளிலும் கட்டப்பட்டுள்ளன.

“தமிழீழ விடுதலைக்காகக் களமாடும் எமது உறவுகளை வரவேற்கிறோம்” எனும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளே கரையோரப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன.

கரையோரப் பகுதிகளான பாஷையூர், ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் போன்ற பகுதிகளில் மேற்படி பதாகைகள் வீதிகளில் கட்டப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. (ம-5-17)

## வானொலியில் நேரடி அஞ்சல்

ஈழத்து இராமேஸ்வரம் என்று அழைக்கப்படும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத்தில் இன்று அதிகாலை முதல் இடம்பெறவுள்ள மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையிலும், யாழ்.சேவையிலும் காலை 5.30 மணிமுதல் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளது.

நேரடி ஒலிபரப்பைச் செய்வதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளர் எஸ்.உருத்திராபதி தலைமையில் குழு ஒன்று இங்கு வருகை தந்துள்ளது. இவர்களுடன் சமயச் சொற்பொழிவாளர் வசந்தா வைத்தியநாதன், காரை எம்.பி.அருளானந்தன், சைவப் புலவர் சத்தியதாசன் ஆகியோர் இணைந்து நிகழ்ச்சிகளை வர்ணனை செய்வர். (ஐ)

## சாவகச்சேரி கோட்ட அதிபர்களுக்கு!

தென்மராட்சி,மார்ச்24

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு ‘யுனிசெவ்’ நிறுவனத்தினரால் அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அப்பியாசப் புத்தகங்களை எதிர்வரும் 26ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை கோட்டக்கல்வி அலுவலர் ந.சத்தியநாதன் அறிவித்துள்ளார். (ம-117)

## ஆதீனக் குருவின் குருபூசை ஆராதனைகள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதலாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 21ஆவது குருபூசை ஆராதனைகள் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு ஆதீனத்தின் இரண்டாவது குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்றன.

காலை 10 மணிக்கு சங்காபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனை பூசை வழிபாடுகளும் அதனைத் தொடர்ந்து மாகேஸ்வர பூசையும் இடம்பெற்றது.

பிற்பகல் 4 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் திருவுருவப்பட ஊர்வலம் நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதி, பருத்தித்துறை வீதி வழியாக ஆலய கலா மண்டபத்திற்கு எடுத்துவரப்பட்டது.

சங்கீத பூஷணம் வீ.பரமசாமியின் திருமுறைக் கச்சேரியும் பண்ணிசை வாணர் வி.சிவஞானசேகரத்தின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றது. (ம-111)

# சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

## ‘பொங்குதமிழ்’ தொடர்பாக

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் இந்தமாத இறுதியில் நடைபெறவுள்ள ‘பொங்குதமிழ்’ எழுச்சி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

இன்றைய கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களினதும் நிர்வாக உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. குடாநாட்டு சமூகத்தின் பூரண ஆதரவுடன் மாத இறுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு சனசமூக நிலையங்களின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்குடனேயே இன்றைய கலந்துரையாடல் நடத்தப்படுவதாகவும் -

தொடர்ந்து ஏனைய பொது நிறுவனங்களுடனும் இத்தகைய கலந்துரையாடல்களை நடத்தி பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை குடாநாட்டு மக்கள் அனைவரும் பங்குகொண்டு நடத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வாக நடத்த தாம் திட்டமிட்டிருப்பதாகவும் -

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

## பற்மின்ரன் சங்க கூட்டம்

யாழ். மாவட்ட பற்மின்ரன் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெறும். இக்கூட்டத்திற்கு அனைத்து பதிவு செய்யப்பட்ட கழகங்களையும் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-5)

## இறையியலின் அரசரை வரவேற்போம்

### தவக்காலச்சிந்தனை

“எளிமையும், தாழ்ச்சியையும் எம் அணிகலனாகக் கொண்டால் மகிமையும், அமைதியும் விரைவாய் அருள்வார் இறைவன்”.

உலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் இன்று குருத்தோலை ஞாயிறு (PALM SUNDAY) என்னும் புனித நாளை அனுசரித்து, புனித வாரத்தினுள் தூய்மையாய் நுழைய தம்மை தயார்ப்படுத்தும் தினமாக இந்நாளை எதிர்கொள்கிறார்கள். இயேசுகிறிஸ்து தமது பகிரங்கப் பணி வாழ்வின் இறுதி நாள்களில் ஜெருசலேம் நகருக்கு வந்தபோது மக்களால் வரவேற்கப்பட்டதை நினைவுபடுத்துகிறது இந்தக் குருத்து ஞாயிறு.

மேலை நாடுகளில் அங்கே எழிதாகக் கிடைக்கும் ‘ஒலிவ்’ மரக்கிளைகளை கைகளில் ஏந்தியும், கீழைத்தேசங்களில் குருத்தோலைகளை கரங்களில் தாங்கியும் இந்நாளில் ஆலயங்களில் வழிபடுவர். பக்தி எழுச்சியும், அமைதியும் நிறைந்த உள்ளங்களுடன் புதிதாய் விரிந்த இளம் குருத்துக்களை கைகளில் உயர்த்தி ‘ஓசான்னா தாவீதின் குமாரா ஓசான்னா’ என்று வாழ்த்தி கிறிஸ்து அரசரே உலகின் இரட்கர் என்று விசுவாசித்து அவரை எமது நெஞ்சங்களில் வரவேற்பது சாலவும் பொருத்தமாகும்.

### நாற்பதாம் நாள்

‘இதோ ஜெருசலேம் நோக்கிப் போகிறோம். மனுமகன் குறித்து இறைவாக்கினர் எழுதியுள்ளதெல்லாம் நிறைவேறும். புறவினத்தாரிடம் கையளிக்கப்பட்டு ஏளனத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளாகித் துன்பப்படுவார். அவர்கள் அவரைச் சாட்டையால் அடித்தபின் கொல்வார்கள். அவரோ மூன்றாம் நாள் உயிர்த்தெழுவார்.’ (லூக்.18:31-33) என்று தமது பயணத்தின் குறிக்கோளைத் தெளிவுபடுத்துகிறார். அவ்வாறே செயலிலும் நிரூபித்தார். இறைமகனாயிருந்தும் தன்னையே தாழ்த்தி அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு பணிந்து மீட்பின் காரணரானார்.

இன்று எம் கைகளில் ஏந்திய குருத்தோலைகள் எமக்கு கற்பிக்கும் பாடத்தை உணர்ந்து செயற்படுவோம். விண்ணை நோக்கி இக்குருத்தானது நிமிர்ந்து நிற்பதுபோல் எமது ஆன்மீகப் பாதையை விண்ணகத்தின்பால் நகர்த்துவோம். அதன் வெண்ணிறம் போன்று எமது உள்ளத்தை தூயதாக்குவோம். காற்றில் அசைந்தாடும் தென்னங்கீற்றுப்போல் உண்மைக்கும், நீதிக்கும், அன்புக்கும், அமைதிக்கும் சிரம் தாழ்த்தி புரிந்துணர்வுடன் வாழ்வோம். கல்வாரிப் பாடத்தைக் கைக்கொண்டு எமது வாழ்வை பிறர் நலனுக்காக அர்ப்பணிப்போம். எங்கும் எதிலும் எம்மைத் தாழ்த்துவோம். பணிபுரிவோம். எமது துன்பதுயரங்களை இயேசுவின் சிலுவையோடு சேர்த்து சுமந்து சென்று இன்பமும் மகிமையும் மிக்க விண்ணகத்தில் பிரவேசிப்போம்.

*கொழும்புத்துறை.* **எஸ்.யேசுதாஸ்.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

## சொல்ஜாலம் பயன்தராது

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஒரு மாதம் கடக்கின்றது.

இதுவரை தடங்கல் ஏதுமின்றி உடன்பாட்டு ஏற்பாடுகள் பின்பற்றபட்டிருக்கின்றன என்றே சொல்லப்பட வேண்டும். இனிமேல்தான் உடன்பாட்டுக்கு சோதனை வரப்போகின்றது.

முதல் சோதனை யாழ்.-கண்டி வீதி ஊடாக யாழ்ப்பாணத்துக்குத் தரைவழிப் பாதை ஒன்றைத் திறப்பது பற்றியதாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உடன்பாட்டின்படி, ஒப்பந்தம் கைச்சாத்தாகி முப்பது நாள்களுக்குள் பாதை திறக்கப்பட வேண்டும் என்பது தமிழர்தரப்புவாதம்.

பாதையைத் திறக்கத் தாங்கள் தயார் என்று புலிகளும் அறிவித்துவிட்டனர்.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி முப்பது தினங்கள் என்ற கால அவகாசம் நாளை மறுதினத்துடன் கடக்கப் போகின்றது. ஒப்பந்தத்தின்படி நாளை மறுதினத்துக்கு முன்னர் பாதை திறக்குமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

இல்லை என்று அடித்துக் கூறுகின்றன இராணுவ உயர் வட்டாரங்கள், சித்திரைப் புத்தாண்டோடுதான் பாதை திறக்க வாய்ப்புக் கிட்டும் என்று அவ்வ நம்புகின்றன.

இப்படிக் காலம் தாழ்த்தியே பாதையைத் திறப்பது, உடன்பாட்டு ஏற்பாடுகளை மீறிய செயல் அல்ல என்று விளக்கம் கூறும் இராணுவ உயர்பீடங்கள், ஒப்பந்தத்தில் உள்ள வாசகங்களில் அது தெளிவாக உள்ளதாகவும் தெரிவிக்கின்றன. அதாவது ஒப்பந்த வாசகங்களின் சொல்ஜாலத்தை அரசுத் தரப்பு இது விடயத்தில் நன்கு பயன்படுத்தப் போவதாக விடயமறிந்த வட்டாரங்களின் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு கண்டி வீதி ஊடான தரைவழிப்பாதை குறித்து ஒப்பந்தத்தில் இரண்டு பிரிவுகள் பிரஸ்தாபிக்கின்றன.

முதலாவது - ஒப்பந்த வாசகம் 1-10, அது இலங்கை அரசுத் துருப்புகள் ஆயுதம் தரிக்காமல் இந்த வீதி ஊடாகச் சென்றுவர அனுமதிப்பது பற்றியது. ஒப்பந்தம் கைச்சாத்தாகி அறுபது நாள்களுக்குள் இதற்கு கட்டுப்பாடற்ற அனுமதி வழங்கப்பட்டு விடவேண்டும் என்று திட்டவட்டமாக இப்பிரிவு குறிப்பிடுகின்றது.

அடுத்து - ஒப்பந்த வாசகம் 2-10, அது, இராணுவப் போக்குவரத்து அல்லாத பொருள்கள் மற்றும் பயணிகள் இந்தப் பாதை ஊடாகச் சென்றுவர இரு தரப்பும் அனுமதிக்க வேண்டும் என்றும், இதற்கான நடைமுறை ஏற்பாடுகளை (Specific Modakities) ஒப்பந்தம் கைச்சாத்தாகி 30 நாள்களுக்குள் நோர்வே அரசுடன் சேர்ந்து இரு தரப்பும் வகுத்துக் கொள்ளவேண்டும் என்றும் கூறுகின்றது.

இந்த வாசகங்களின்படி, தரைப்பாதை பொது மக்களுக்குத் திறக்கப்பட வேண்டும். அதற்கான நடைமுறை ஏற்பாடுகளை இரு தரப்பும் முப்பது நாள்களுக்குள் செய்ய வேண்டும் என்று இராணுவத் தரப்பு விவரிக்கின்றது.

முப்பது நாள்களுக்குள் நடைமுறை ஏற்பாடுகளை வகுக்கவேண்டும் என்றுமட்டும்தான் ஒப்பந்தம் கூறுகின்றது. அந்த முப்பது நாள்களுக்குள் அதைச் செயற்படுத்தத் தொடங்கவேண்டும் என்று ஒப்பந்தம் வலியுறுத்தவில்லை என்றும் இராணுவ அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒப்பந்த வாசகம் 1-10 மட்டுமே இந்தப் பாதை ஊடாகப் பயணம் ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு திட்டவட்டமான கால எல்லையை வலியுறுத்துகின்றது. அதன்படி, ஒப்பந்தம் கைச்சாத்தாகி அறுபது நாள்களுக்குள் இந்தப் பாதை பயணத்துக்குத் தயாராக இருந்தால் போதும் என்பதும் இராணுவத் தரப்பின் நிலைப்பாடு.

இராணுவத் தரப்பின் இந்த நிலையைப்பாட்டையும் வியாக்கியானத்தையும் பிரதமர் ரணிலும் அவரது அரச உயர் பீடத்தினரும் ஏற்றுக் கொள்வார்களா? அல்லது திட்டமிட்டபடி நாளை மறுதினத்துக்கு முன்னர் பாதையைத் திறக்கும்படி இராணுவத்துக்குக் கடும் உத்தரவுகளைப் பிறப்பிப்பார்களா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த ஆரம்ப விடயத்திலேயே ஒப்பந்த வாசகங்களின் சொல்ஜாலங்களுக்குப் புதிய வியாக்கியானங்கள் கொடுத்து, அரசுத் தரப்பு நழுவப் பார்க்குமேயானால் தீர்வுக்கான தோற்றம் கானல் நீராகவே இருக்கும். அந்த முயற்சிகள் பலன் தர மாட்டா என்பது நிச்சயம்.

நூறுநாள் அபிவிருத்தியின் கீழ்

## பாடசாலைகளில் பல்வேறு திட்டங்கள் நடைமுறையில்!

கொழும்பு,மார்ச்24

அரசின் நூறுநாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாடசாலைகளின் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பாடசாலை மாணவர்களின் பொருளாதார வளத்தை ஊக்குவிப்பதற்காக பாடசாலைகளில் விவசாய உற்பத்திப் பொருள்களைப் பயிரிடுதல் காய்கறிப் பயிர்களையும் மருத்துவ மூலிகைகளையும் பயிரிட்டு மாணவரை சுய பொருளாதார விருத்தியுள்ளோராக உருவாக்குதல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களை பாடசாலைகளில் அரசின் நூறுநாள் அபிவிருத்தித் திட்டத்திற்கமைவாக மேற்கொள்ளும்படி பாடசாலைக் கல்வியமைச்சு நாட்டில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. (ம-5)

## சிலிங்கோ நிறுவனம் யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்

கொழும்பு,மார்ச்,24

யாழ்ப்பாணத்தில் சிலிங்கோ நிறுவனம் தனது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதாக சிலிங்கோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிலிங்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம திகதி கட்டட திருத்த வேலைகளை மேற்கொண்டு மீண்டும் விரைவில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கப்படக்கூடிய பாதுகாப்பான சூழல் உருவாகியுள்ளதாக புலிகள் இயக்க பிரதேச தலைவர்கள் தமக்கு உறுதியளித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-5)

## நிரந்தர சமாதானத்துக்கு பேச்சை விட சிறந்தவழி இல்லை

### படையினர் பெற்றோர் வலியுறுத்து

கொழும்பு,மார்ச்24

நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கு பேச்சுக்களை விட வேறு சிறந்த மார்க்கம் கிடையாது என காணாமற் போன படை வீரர்களின் பெற்றோர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அச்சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் அநேகமான மக்கள் சமாதானத்திற்காக அரசாங்கத்திற்குத் தெளிவான ஆணையைப் பெற்றுக்கொடுத்துள்ளனர். அரசாங்கத்திற்கு ஆணை கிடைத்துள்ள இந்தத் தருணத்தில் சமாதானத்தை எதிர்க்கும் தீயசக்திகள் அமைதியைக் கடைப்பிடிப்பதுதான் சிறந்தது.

அரசாங்கம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கு பேச்சு மூலம் விரைவில் நிரந்தர தீர்வொன்றை ஏற்படுத்தவேண்டும். இதற்கு சகலதரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலைப் பகுதியில்

## கைவிடப்பட்ட காவலரண் அருகே பெருமளவு கண்ணிகள்

வடமராட்சி கிழக்கு,மார்ச்24

கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலைக்கு அண்மையில் படையினரால் கைவிடப்பட்ட காவலரண்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகளில் சிக்கி இதுவரை பெருந்தொகையான கால்நடைகள் பாதிப்படைந்துள்ளன.

மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் காணப்படும் இந்தக் காவலரணின் அருகே புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகளால் அப பகுதி மக்கள் பெரும் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த ஐஸ்தொழிற்சாலைக்கு முன்னாலேயே கற்கோவளம் கடற்கரைக்குத் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் செல்லும் வீதியும் அமைந்துள்ளது. (ம-182)

## இந்த மாதத்திற்கான நிவாரணம் பட்டியல் மூலமாக வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்24

இந்த மாதத்திற்கான நிவாரணத்தினை அனைவருக்கும் பட்டியல் மூலமாக வழங்குமாறு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரை மூலமாக நிவாரணம் பெற்று வந்தவர்களுக்கே இந்த மாதத்திற்கான நிவாரணம் பட்டியல் மூலம் வழங்கப்பட இருக்கின்றது.

நிவாரணங்கள் பெறுவதற்கான புதிய உணவு முத்திரைகள் வழங்கப்படுவதில் காணப்படும் காலதாமதங்கள் காரணமாகவே இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த மாதத்திற்கான நிவாரணங்களை வழங்க சகல ஏற்பாடுகளும் செயயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-5-180)

### நாளை

பங்குனி 11
திங்கட்கிழமை
(25.03.2002)
திதி : ஏகாதசி
முற்பகல் 9.58 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
முன்னிரவு 10.36 வரை.
ஏகாதசி விரதம்
யோகர் சுவாமிகள் குரு பூசை
சுபநேரம் : [illegible]
ராகுகாலம்: [illegible]
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சரியான நேரத்தில் சரியான முடிவெடுத்து, சரியாகச் செயல்படுத்தும் மனிதனுக்கு பெருமை தவிர வேறில்லை.

## நாட்டு நடப்பு

### நவீன திருவெம்பாவை VIII

எங்கள் தமிழ் கலைகள்
எல்லாமே அழிந்ததெடி
நங்கை உனது புகழ்
நானிலத்தில் மறையுதடி
பொங்கு தமிழ் உணர்வு
பெருக்கெடுத்து ஓடியென்ன?
சங்கம் வளர்த்த தமிழ்
சாகாது வாழ்வதற்கு
தங்கை உனது பணி
தப்பாது வேண்டுமெடி
வங்கக்கடல் அலை சூழ்
வளமார் ஈழமதில்
தங்கத் தமிழ் அரசு
தப்பாது மலர்ந்திடவே
எங்கள் தமிழ் பண்பதனை
ஏற்றுநட! எம் பாவாய்!

*- விகடகவி*

## செலூலர் தொலைபேசி நிறுவன அதிகாரிகள் குழு யாழ். வந்தது

யாழ்ப்பாணம்,மார்ச்24

தனியார் தொலைபேசி நிறுவனமான லங்கா செலூலர் சேவிஸ் நிறுவனத்தைச் சேர்ந்த குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தது.

நேற்றுக்காலை வருகைதந்த குழுவினர் காலை 10 மணியளவில் யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்.குடாநாட்டில் தமது நிறுவனச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது பற்றியும் அதற்கான சூழ்நிலைகள் மற்றும் நிலைப்பாடுகள் பற்றியும் அவர்கள் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

லங்கா செலூலர் சேவிஸ் பிறைவேட் நிறுவனத்தின் வர்த்தக முகாமையாளர் றஜித ரத்வத்த தலைமையிலான 3 பேர் கொண்ட குழுவே இவ்வாறு வருகைதந்தது. (ம-10-8)

மீண்டும் ஒரு தடவையாக

## ஜனாதிபதியை மக்கள் நிராகரிப்பு; நாகரிகமாக அவர் பதவி விலகுவாரா?

### அமைச்சர் திஸநாயக்கா கேள்வி

கொழும்பு,மார்ச்24

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியை மக்கள் நிராகரித்து இருக்கிறார்கள். எனவே அவர் நாகரிகமான முறையில் பதவி விலகுவாரா? என சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவை நிராகரித்தும் பிரதமர் ரணிலை ஆதரித்தும் உள்ளூராட்சி தேர்தலில் மக்கள் வாக்களித்துள்ளனர். பொதுஜன ஐக்கிய முன்னணியின் கோட்டைகளான பல உள்ளூராட்சி அமைப்புகள் ஐக்கிய தேசிய முன்னணியிடம் வீழ்ச்சி கண்டுள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணியையும் ஜனாதிபதியையும் மக்கள் இனி ஏற்கத் தயாராக இல்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

தேர்தல் முடிவுகளின்படி இலங்கை வாழ் மக்கள் அனைவரும் இனவாதத்தை வெறுத்தொதுக்குவதுடன் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ விரும்புகிறார்கள் என்பது புலப்படுகிறது. ஆகையால் ஜனாதிபதியையோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியினையோ மக்கள் ஏற்கப் போவதில்லை என்பது அழுத்தம் திருத்தமாக மக்களால் உணர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஒ-5)

## பொங்கு தமிழ் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் எதிர்வரும் 17ஆம் திகதி நடத்தப்படவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கோயில் வீதியில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மனித நேய அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஒன்றியத்தின் தலைவர் சு.பரமநாதன் தெரிவித்துள்ளார். (ம-10)

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### நம்பிக்கையுடனே இருக்கின்றோம்!

நானிலம் போற்றும் வைத்தீஸ்வரா
நல்லவர் உள்ளத்தின் ஒளிவிளக்கே
பொங்கும் நல்லருளை நாடிநிற்கும்
நம்மையே ஓடிவந்து காத்தருள்வாய்
உன்னை நம்பினோர்க்கு உறுதுணை
நீயென்று நம்பிக்கையுடனே இருக்கின்றோம்
மனிதநேயம் வளர்க சமாதானம் மலர்க
நிம்மதியைப் பெற்றிடவே வழி காட்டுமையா

*- சமூகஜோதி கா.கணேசா[illegible]ன் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ITP
JAFFNA SRI LANKA

# தகவல் தொழில்நுட்பப் பூங்கா

## ஓராண்டு பூர்த்தியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

RRAN

**- சிறப்பு மலர் -** 24-03-2002

**தகவல் தொழில்நுட்பத்தை வளர்ப்பதற்காக எமது நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தினை இச்சிறப்பு மலர் ஊடாக வெளிப்படுத்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.**

### தகவல் தொழில்நுட்பப் பயிற்சிமையம் (IT Training Centre)

எமது நிறுவனத்தில் பின்வரும் கற்கைநெறிகள் தற்பொழுது இடம்பெற்றுவருகின்றன.

Dip.in.Ms.Office
Dip.in.Hardware
Dip.in.DTP
Dip.in.Office management
Workshop Internet & E - Mail
Workshop PC Hardware
Certificate Courses



தொழில்நுட்பப் பயிற்சிகளுக்காக நூறுக்கும் அதிகமான கணனிகள் சேவையில் உள்ளன. அத்துடன் அனைத்து மாணவர்களிற்கும் போதிய அளவு பயிற்சி நேரம் வழங்கப்படுவதுடன், ஒவ்வொரு மாணவருக்கும் சிறந்த முறையில் நேரடியான வழிநடத்துதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மின்வெட்டு நேரங்களிலும் திருப்தியான சேவையினைப் பெற்றுக்கொள்ள வசதிகள செய்யப்பட்டுள்ளதுடன், சிறந்தமுறையில் பயிற்சியை மேற்கொள்வதற்காக உகந்த சூழலும் மேலதிக வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சான்றிதழ் கற்கைநெறி பிரிவிலும் திறமையாக சித்தியடைந்தவர்களிற்கு ஆறுமாதகால இலவசப்பயிற்சியும் வழங்கப்படுகின்றது. தற்போது தொழில் புரிபவர்களிற்கென பிரத்தியேகமாக மாலை நேர On - line Class நடைபெற்று வருகின்றது. நவீன கருவிகளின் உதவிகொண்டு மேற்கொள்ளப்படும் இவ் வகுப்பிற்கான அனுமதிகள் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இப் பயிற்சித் திட்டத்தின் கீழ் மிகவிரைவில் புதிய பல கற்கை நெறிகளும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

### வன்கூற்றுப் பிரிவு (Hardware Division)

இப் பிரிவினூடாக கணனி சம்பந்தமான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இச்சேவையினை எமது நிறுவனத்திலும், தங்கள் இடங்களில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும். மிகக் குறைவான கட்டணத்தில் உறுதியான நம்பகரமான சேவைகளினைப் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் இப்பிரிவினூடாக பழுதுகளினை இனம்காணல், அவற்றினைத் திருத்துதல் என்பவற்றிற்கான பயிற்சியும், பழுதடையாமல் பாதுகாப்பதற்கான வழிமுறைகளினையும் பெற்றுக்கொள்ளமுடியும்.



### தகவல் தொழில்நுட்ப சேவைகள் (IT Services)


தற்பொழுது எமது நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்ப சேவைகள் பிரிவினூடாக பின்வரும் சேவைகள் இடம்பெறுகின்றன.

கணனிப் பாவனையாளர்களிற்கு அவர்களின் தேவைக்கேற்ப வசதியான சேவையினை வழங்குவதுடன் அதற்கான பயிற்சியினையும் வழங்கல்

Web Page தேவைப்படும் நிறுவனங்களிற்கு மிகச் சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுத்தல் மற்றும் அது சம்பந்தமான பயிற்சியும் ஆலோசனையும் வழங்கல்.

கணனி வலையமைப்பை மேற்கொள்ள ஒரு நிறுவனம் முயலும்போது அதற்கான திட்டங்களினை வகுத்துக் கொடுத்தல்.

### இணைய சேவை (Cyber Cafe)



யாழ். மாவட்டத்தில் முதல் தடவையாக எமது நிறுவனத்தில் செய்மதி மூலமான இணைய சேவையானது 13. 01. 2002 அன்று புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள் குடியமர்த்துகை அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட மாணவர்கள், பொதுமக்கள், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்களின் தேவைகளினை திறம்பட பூர்த்திசெய்து வருகின்றது. இருபதுக்கும் மேற்பட்ட கணனிகள் வலைப்பின்னல் மூலம் இணைக்கப்பட்டு இச் சேவையினை வழங்குவதால் ஒரே நேரத்தில அதிகமானோர் இச் சேவையினைப் பெற வாய்ப்பாக உள்ளது. மிகக் குறைவான கட்டணத்தில் நிறைவான தொடர்புகளினை வழங்கிவரும் இவ் இணைய சேவை எதிர்வரும் காலங்களில் மேலும் பல புதிய மாற்றங்களினை அறிமுகம் செய்ய உள்ளது.



### சுயமுயற்சிப் பிரிவு (Self Training Division)

இப்பிரிவு அனேகரின் வேண்டுகோளிற்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எமது நிறுவனத்தின் கணனிகளைப் பயன்படுத்தி தாமே தமது தேவையினை நிறைவேற்றிக் கொள்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


தேவை ஏற்படும்போது தேவையான உதவிகளையும் பெற்றுக்கொள்ளவும்முடியும். தற்பொழுது ஒருமணிநேரம் பாவனைக்காக 30 ரூபா அறவிடப்படுகிறது.

### சிறுவர்களுக்கான பயிற்சியும் சிறுவர் விளையாட்டுப் பிரிவும் (Children Training and Cyber Kids)

இப்பிரிவில் சிறுவர்களிற்கென நன்கு திட்டமிட்ட பயிற்சிகளும், விளையாட்டுக்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பன்னிரண்டு வயதிற்கு குறைவான சிறுவர்களிற்கு மட்டும் வயதின் அடிப்படையில் இரு பகுதியாக பிரிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.



சிறுவர்களின் நினைவாற்றலை வளர்த்தல். கணனி அறிவை விருத்தி செய்தல் ஆகிய குறிக்கோள்களின் அடிப்படையில் மிகவும் அவதானமாக மேற்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




## எமது நிறுவத்தின் செற்பாட்டுப் பிரிவுகள்

### தகவல் தொழில்நுட்ப நூல்நிலைய சேவை (IT Library Service)

தகவல் தொழில்நுட்பத்துறையில் ஆர்வமுள்ள எவரும் இந் நூல் நிலையத்தில் அங்கத்துவம் பெறமுடியும். இங்கு கணனி சம்பந்தமான ஆங்கில, தமிழ் புத்தகங்கள் மற்றும் கணனி தொடர்பான உள்நாட்டு சஞ்சிகைகள் என்பன உள்ளடங்கியுள்ளது.

அத்துடன் சிறுவர் கணனி நூல்களினையும் கொண்டுள்ளது. தற்பொழுது வாசிப்புப் பகுதியை மட்டுமே கொண்டுள்ளது.

### விற்பனைப் பிரிவு (Sales Unite)

இப் பிரிவில் கணனி சம்பந்தமான கையேடுகள், பாடநூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். இவை தவிர கணனி, கணனி சம்பந்தமான உதிரிப்பாகங்களின் விற்பனையினை மேற்கொள்வதற்குரிய முன்னேற்பாடுகள் மேற்கொளளப்பட்டு வருகின்றன.

அத்துடன் Photo Scanning வேலைகள், வடிவமைப்பு வேலைகள், Printing வேலைகள் என்பவற்றினையும் குறைந்த கட்டணத்தில் செய்துகொள்ள முடியும்.

(சி21258)

சீமாட்டி
புடைவை அகம்
நவநாகரீக பட்டுப் புடைவைகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் பெயர் பெற்ற ஸ்பானம்.
122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

விணோ நகைப் பூங்கா
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்றும் இன்றும் என்றும்
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Sri Murugan
Computer Systems, Communication Services & Agency Post Office
T.Phone 021-2670, 3214
303, K.K.S. Road, Jaffna.

நிதுஷா ஸ்ரூடியோ அன் வீடியோ
Nithusha Studio & Video
Mains Street, Nelliady, Karaveddy.

நிறமும் தரமும் நிரந்தரம்
சானுகா நகைமாடம்
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:-021-3700

வி.எம்.கே.ஜுவலர்ஸ்
V.M.K.JEWELLER
தங்கப்பவுண் நகை வியாபாரம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
305, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கபிலா காலணியகம்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Kalyani Cream House
73, Kasthuriar Road, Jaffna.

Kughan Stores
180 (380), Hospital Road, Jaffna.
T.P:021-2767

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WANTED

1. NURSE RETURNING FROM U.K. WISHES TO MEET - GOV. QUALIFIED NURSES TO SEE THE POSSIBILITY OF EMPLOYING THEM IN ELDERS HOME. MUST BE ABLE TO CONVERSE IN ENGLISH.
2. A PERSON WITH COMPUTER KNOWLEDGE TO DO TYPESETTING IN TAMIL & ENGLISH.

PLEASE CONTACT:

**C.JOSEPH,**

*72 A, RACCA ROAD, JAFFNA.*

TEL & FAX } 2597 (1873) e.mail: brendonj@slt net.lk


## புளொட் ஆயுதங்கள் கையளிப்பு

மட்டக்களப்பு,மார்ச்24

புளொட் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்கள் தம் வசம் வைத்திருந்த ஒரு தொகுதி ஆயுதங்களை நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் 233 ஆவது படையணி அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

புளொட் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் கே.பாக்கியராஜா ஆயுதங்களைப் படை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்.


ரி-56 ரக, ரி-85 எல்.எம்.ஜி. ரகத் துப்பாக்கிகள் 27 மற்றும் அவற்றுக்கான ரவைகள் ஆகியனவே நேற்று ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. செங்கலடி, கறுப்புப் பாலம், வவுணதீவுப் பாலம் ஆகிய இடங்களிலும் முகாம் அமைத்துச் செயற்பட்டு வந்த புளொட் அமைப்பினர் அந்த முகாம்களை மூடிவிட்டு மட்டக்களப்பு நகரில் தங்கியுள்ளனர்.

தங்கள் அலுவலகத்துக்குப் படையினர் பூரண பாதுகாப்பு வழங்கினால், தம்வசம் உள்ள சகல ஆயுதங்களையும் உடனடியாகக் கையளிக்கத் தயார் என்று புளொட் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

"ஓர் அரசியல் கட்சிக்குப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு படையினர் வசம் இல்லை. பொலீஸாரே பாதுகாப்பை வழங்கவேண்டும். ஆயுதங்களைக் களையும் பொறுப்பு மட்டுமே எம்மிடம் உள்ளது" என்று மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் அன்ரனீஸ் தெரிவித்துள்ளார்.

(ஐ-3-21)


நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் ஆரம்ப உறுப்பினரும், ஆயுட்கால அங்கத்தவரும், கௌரவ பொருளாளருமான

உயர்திரு.

ஈ.எஸ். விஜயராசசிங்கம்

அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு மனப்பூர்வமாக அவரைப் பாராட்டுவதுடன், அவர் பல்வளங்களும் பெற்று மேலும் சிறந்தோங்க உளமார வாழ்த்துகின்றோம்.

62/1, செட்டித் தெரு,
நல்லூர்.

யாழ்.மாவட்ட
அரச ஓய்வூதியர் சங்கம்.

(1875)


## மண்மேடு சரிந்து ஐவர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

கந்தரோடை சங்கம்புலோ சுடலைக்கு அண்மையில் உள்ள மண் பிட்டியைக் குடைந்து உழவு இயந்திரத்தில் மண் ஏற்றும்போது மண் மேடு இடிந்து வீழ்ந்ததில் அதற்குள் சிக்கி 5 பேர் காயமடைந்தனர்.


நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிக் கொண்டிருந்த நல்லதம்பி அருமைத்துரை (வயது 54), தனபாலசிங்கம் குகதாஸ் (வயது 31), எஸ்.துரைரட்ணம் (வயது 33), கந்தசாமி விஜயசூரியா (வயது 30), எஸ்.பாலச்சந்திரன் (வயது 30) ஆகிய 5 பேருமே காயமடைந்தவர்கள் ஆவர். இவர்களில் மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயரமாக இருந்த மண்மேட்டின் அடிப்பகுதியைக் குடைந்து ரக்ரரில் மண் ஏற்றிக்கொண்டிருந்த சமயம் திடீரென அந்த மண்மேடு இவர்கள் மீது இடிந்துவிழுந்ததாகக் கூறப்படுகிறது.

(ஐ-6-9)


ஈரவிழிகளுடன் மூன்றாம் ஆண்டு

எங்களுக்காக 14 ♦ 04 ♦ 1950



எங்களை விட்டு 24 ♦ 03 ♦ 1999

அமரர் சிங்காரம் சந்திரலிங்கம்

திதி: 24.03.2002

*ஆறுதல் சொல்ல இனி யாரும் இல்லையப்பா!*
*ஆலமரம் சாய்ந்ததினால் ஆற இனி இடமுமில்லையே!*
*ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்*
*ஆறிடுமோ எம் சோகம் நாயகனே!*
*உன்னைக் கைப்பிடித்த நாள் முதலாய்*
*கலங்காது காத்திடுவாய் என்றேன்.*
*பாசமழையில் எம்மை வளர்த்த எங்கள் தெய்வமே!*
*ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எம் துயர் அப்பா!*
*மூன்று ஆண்டென்ன மூவாயிரம் யுகங்கள்தான் சென்றாலும்*
*'சந்திரா சந்திரா' என்று முத்து ஐயன் கட்டே முழங்குகிறது.*
*அப்பா எங்களுக்கு எப்படி சந்தோசம் வந்தாலும்*
*எங்களுக்கு அப்பா இல்லையே என்று கதறுகிறோம்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய வினைதீர்க்கும் விநாயகரை வேண்டிநிற்கும:

தகவல்: S.சுஜா.
*கம்பர்மலை, வல்வெட்டித்துறை.* (1871) - குடும்பத்தினர்.


## வவுனியாவில் திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனை

வவுனியா,மார்ச்24

தியாகி திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனை ஒன்று விரைவில் வவுனியாவிலும் திறக்கப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

இந்த மருத்துவமனை வவுனியா மாவட்டம் நயினாமடுவில் அமைக்கப்பட்டுவருகிறது.

(ஐ-4-ரி)


கொழும்பிலுள்ள பிரபல தனியார் நிறுவனமொன்றில் பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன

☆ Computer Hardware Technician
☆ Marketing Reps (யாழ்ப்பாண குடாநாட்டிற்குள்)

Computer, Marketing முன்னனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.
தொலைபேசியில் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொண்ட பின் நேர்முகப் பரீட்சைக்கான திகதி வழங்கப்படும்.

**V.J.Enterprises**
**292, Ground Floor, sea Street, Colombo - 11**
**Tel: 075 - 358634, 075 - 350113, 075 - 365267**
**Fax: 452767**
E-Mail: **vjenter @ sltnet . IK** (C-21183)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி தங்கமுத்து கந்தையா

மலர்வு 21-02-1919
உதிர்வு 24-03-1999

*அன்பின் திருவுருவாய் அணையா*
*ஒளிவிளக்காயிருந்து*
*எமக்கு வழி காட்டிய*
*முன்னறி தெய்வமே!*
*ஆண்டுகள் பல சென்றாலும்*
*ஆறாது எம் துயரம்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிரிவால் துயருறும்:*
அன்புக் கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*'அன்னை இல்லம்'*
*வியாபாரி மூலை,*
*பருத்தித்துறை.* (1819)

ஏழாம் ஆண்டு ஏக்கநினைவுகள்

மலர்வு 22 - 05 - 1937



உதிர்வு 10 - 04 - 1995

அமரர்

ஆறுமுகம் ஜெயரத்தினம்

(முன்னாள் உதவி முகாமையாளர், இலங்கை வங்கி)

திதி: 24.03.2002

பூப்போல தாங்கினாய் அன்று
புழுப்போலத் துடிக்கின்றேன் இன்று
அரவணைக்க யாருமில்லை இங்கு! காலனுக்கும்
அழைப்பதற்கு நேரமில்லை இன்னும்.

தங்கள் ஆத்மா இறைவனடியில் அமைதி பெற்றிட இறைஞ்சும் உங்கள் குடும்பத்தினர். (1872)

*66/2, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மக்கள் வங்கி

யாழ். பல்கலைக்கழகக் கிளையின்

நீடித்த கருமபீடத் திறப்புவிழா

மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழகக் கிளையின் நீடித்த கருமபீடக்கிளை திருநெல்வேலியில் அமைந் துள்ள கட்டடத்தில் பங்குனி மாதம் 11ஆம் நாள் நாளை (25.03.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத் **துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை** அவர்களால் மங்களகரமாகத் திறந்துவைக்கப்படும்.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம்,
79, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
20.03.2002

பிரதேச முகாமையாளர்,
யாழ்.பிரதேசம்.
முகாமையாளர், ஊழியர்கள்,
யாழ்.பல்கலைக்கழகக்கிளை.

(C-21200)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

# ஈழத்து இராமேஸ்வரம் - புங்குடுதீவு பா

# ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்பாள் சமேத ஸ்ரீ இ

# மஹா கும்பாபிஷேகப் ...

24-03-2...

## ஆதீன முதல்வரின் அருளாசியுரை

புங்குடுதீவு - பாணாவிடையில் எழுந்தருளியிருந்து அருளாட்சிபுரியும் எம்பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். பழைமையும் பெருமையும் வாய்ந்த இந்த ஆலயமானது புங்குடுதீவு மக்களுக்கு இறைவனுடைய அருளைப் பெற்றுத் தருவதாக அமைந்துள்ளது. சைவத் தமிழ்மக்கள் நெடுங்காலமாகத் தங்களுடைய குலதெய்வமாகப் போற்றி வழிபாடு செய்யத் தான் தோன்றியாக இவ்வாலயத்தில் இறைவன் வீற்றிருந்து வேண்டுவார் வேண்டு வதை அருளுகின்றான். இவ்வாலய கும்பாபிஷேகத்தைச் செய்யும் சிவாச்சாரியார்களுக்கும் பரிபாலன சபையினருக்கும் புங்குடுதீவு மக்களுக் கும் இறை அருள் கிடைப்பதாக.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**
**இரண்டாவது குரு மஹா சந்நிதானம்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

## காஞ்சிப் பீடாதிபதியின் ஆசி

மஹா சிவபக்தனான இராவணன், ராஜ்ய பரிபாலனம் பண்ணின இலங்கையில், புங்குடுதீவில் ஈழத்து இராமேஸ்வரம் என்னும் பாணாவிடை சிவன் தேவஸ்தானப் பரிபாலன தர்மகர்த்தா சபையின்மூலம் பர்வத வர்த்தனி சமேத ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமி தேவஸ்தான ஜீர்ணோத்தாரண திருப்பணி வேலைகள் முடிக்கப்பெற்று 24.03.2002இல் மஹா கும்பாபி ஷேகம் நடத்த இருப்பதையும், அதன் தொடர்பாக சிறந்த மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து பூஜ்ய ஸ்ரீ மஹா சந்நிதானம் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

நிர்விக்னமாய் மஹா கும்பாபிஷேகம் நடந்து வெளியிடப்படும் கும்பாபிஷேக மலரும் மக்களுக்குப் பயன்படும்படி அமைந்து ஸ்ரீ பர்வத வர்த்தனி சமேத ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள் அருளால் மக்களனைவரும் சகல மங்களங்களையும் அடைந்து பரமக்ஷேமமாக வாழவேண்டும் என்று ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஆசீர்வதிக்கின்றார்கள்.

*ஸ்ரீ மடம் ஸமஸ்தானம்,* **ஸ்ரீ சங்கர மௌலீச வராயமே**
*காஞ்சிபுரம்.* **ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி**
**ஜகந்தரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள**

## பேதித்து என்னை வளர்த்தெடுத்த பெய்வளை!

1945இன் முற்பகுதி புங்குடுதீவுக் கிராமத்தில் சிறார்கள் சீதபேதி நோயினால் வகை தொகை தெரியாது மரணத்தைத் தழுவிக் கொண்டிருந்தனர். அப்பூதியடிகள் போன்று பாணாவிடை அப்பனுக்கு அடிமை பூண்டிருந்த எனது பேரனார் மாணிக்கமும் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த தன் மூத்த பேரனை, "இக்கல் உள் நீ இருப்பதானால் இக்குழந்தை தப்பும்" என பாணாவிடை அப்பன் மீது பழிபோட்டுக் கொண்டும் குழந்தையின் உடலில் உயிர் இருக்கின்றதா? என அடிக்கடி தொட்டுப் பார்த்துக்கொண்டும் யாழ். தர்மலிங்கம் டாக்டர் அவர்களின் வைத்திய மனையுள் புகுந்தார். அவன் விருப்பப்படியே அக்குழந்தையும் பிழைத்தது. அக்குழந்தையே இந்த அடியவன். அவன் அருளாலே அவன் தாள் பணிந்தேன் என்பதைத் தவிர யாதொன்றும் அறியேன். யாவும் எப்பவோ முடிந்த காரியம். இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

அடியான்
**வைத்தியகலாநிதி ஆ.பேரின்பநாதன்**
**சபைத் தலைவர்.**

## வாழ்த்துச் செய்தி

ஈழத்து இராமேஸ்வரம் எனப்போற்றப்படும் புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் ஆலயம் சுயம்பு லிங்கத்தைக் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். மிகச் சிறப்பான முறையில் மெய்யடியார்களின் பூரண ஆதரவுடன் இவ்வால யம் புனரமைக்கப்பட்டு குடமுழுக்குக் காண்பது மிகவும் போற்றத்தக்கது.

ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படுவதன்மூலம் தெய்வ சாந்நித்தியம் பெறுகின்றன. இதன்மூலம் வழிபட வரும் அடியார் களின் பக்திச் சிரத்தைக்கேற்ப அருட்கடாட்சம் பெருகுகின்றது. அவ் வேளையில் இவ்வாலயத்தின் திருப்பணி வேலைகளை மிகவும் அர்ப்பணிப் புணர்வுடன் ஆற்றிவரும் பரிபாலன தர்மகர்த்தா சபையினரை மனமாரப் பாராட்டுகின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்,**
**பணிப்பாளர்,**
**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.**

## ஆலய குருவின் ஆசியுரை.....!

பூங்குடியில் பழம்பெரும் பதியாய் நின்று அருளாட்சி செய்யும் எம் அம்மையப்பரின் அருள்மிகு ஆலயம் வரலாறு காணாத வகையில் கலை வடிவம் பெற்று குடமுழுக்கும், சித்திரத்தேர் வெள்ளோட்டமும் காண திருவருள் முன்னிற்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். ஆலய சூழலில் வாழ்ந்த குடும்பங்கள் கடல் கடந்து சென்றும் அப்பன் கருணையை மறவாது இத்திருப்பணிகளுக்கு உதவியமை அறப்பணிகளை முன்னெடுத்துச் செய்துள்ளமை அக்கிராம மக்களின் பக்தியின் வெளிப்பாடேயாகும். திருவருளை எல்லோரும் வேண்டுதல் செய்வோம்.

**சிவாகம கிரியா சிரோன்மணி கிரியாபூஷணம்**
**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்**
**மதுரையம்பதி, புங்குடுதீவு -3**



## இந்து சமயப் பேரவைத் தலைவரின் வாழ்த்து

வளம் பெருகு பாணாவிடைப் பதியின் கண்ணே
மனம் பெருகு சிவக்கன்று மருதப் பஸ்வோமி
தளம் பெருகு இராமலிங்கப் பெருமா னோடு
தவம் பெருகு பர்வதபத் தினியை வைத்து
உளம் பெருகு ஞானயோ கத்தால் பேணி
ஒளி பெருகு கோயிலாய்த் தந்த புங்கூர்
விளங்குசிவன் ஆலயத்தின் குடமுழுக்கு
மிளிருலக நலம்பெருக்கி வாழி! வாழி!!

அப்பரது பெயரினால் அன்னதானம்
ஆதிதிரு வீழிமிழலை ஒப்ப, ஆற்றும்
செப்பரிய பணிநிறைந்த தொண்டர் கோயில்
திருப்பணிகள் செய்தோர்கள் வேதியர்கள்
முப்பொழுதும் பூசிப்போர் ஏனையோர்கள்
முக்கண்ணன் இராமலிங்கன் கருணைபொங்கி
எப்பொழுதும் சுகம் இழந்து மனம் சிறந்து
இமையவர் போல் பல்லாண்டு வாழி! வாழி!!

அளவையூர்
**அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்.**

## நாளை எம் திருநாட்டில் ...
## ஈழத்து இராமேஸ்வரத்தா...

எந்தன் ஈழத்து இராமேஸ்வரத்தில் குடமுழுக்...
எழிலான எம் தேசத்தில் விரைவாக வ...
செந்தமிழர் நிலம் சூழ்ந்த துயரங்கள் எல்லாம்...
சேமமுற தெய்வீகம் இம்மண்ணில் பெ...
வந்தனைகள் தினமிங்கே வளம்பெருகி நடக்க...
வளமான வாழ்விங்கு மாண்போடு ம...
சிந்தனைகள் அறம்பெருகி நிறைந்து விளங்கட்...
சீர்மிகுந்த சிவவாழ்வு ஈழத்தமிழ்நிலத்...

ஐந்திணைப் பதியிலமர்ந்த இராமலிங்க சுவாமி...
அழகொளிரும் திருக்கோயிலில் குடமு...
வந்தனையாலுயர் புங்கைநகர் புதுக்கோலத்தா...
வண்டமிழ்ப் பாணாவிடை ஈசன் திரு...
சந்ததமும் மெய்யடியார் துயர் தீர்க்கும் பாண...
சரித்திரம் போற்றும் தீவகத்தில் தான்...
விந்தை மிகு அற்புதங்கள் விளைத்து எமையெ...
விடையேறும் பெருமானாய்ப் புங்கைப்...

**மதுரகவி காரை...**
ஈழத்தமிழ் சைவ...

## பர்வத வர்த்தனி சமேத இராமலிங்கேஸ்வர...
## ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

சப்த தீவுகளிலொன்றான "சுவர்ணதூத்ரி" (பொன்கொடுதீவு) என அழைக்கப்படும் புங்குடுதீவிலேயுள்ள ஊரதீவிலே ஐந்திணைச் சூழல் கொண்டுள்ள பாணாவோடை எனுமிடத்திலும் பழைமையான நீள்சதுர வடிவிலான லிங்க வடிவிலே சிவபிரான் எழுந்தருளியுள்ளார். இவ் லிங்கம் நிலமட்டத்தின் கீழ் இரு கவருடையதாக ஆழம் தெரியாத அளவில் கீழ் நோக்கியும் மேல் நோக்கியும் வளர்ந்து கொண்டிருப்பதாகவும் கூறப் படுகிறது. 1991இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னரும் இது சற்று வளர்ந்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதிலே எழுத்துக்கள் போன்ற சில கீறல்கள் உள்ளன. இங்கு பர்வதவர்த்தனி சமேத இராமலிங்கேஸ்வரராக அவர் வழிபடப்படுகிறார். இங்குள்ள தலவிருட்சம் மாவிலங்கையைச் சேர்ந்த மரமாயினும் அஃது இனங்காணப்படவில்லை. பாணர்கள் இப்பகுதியில் வாழ்ந்த காரணத்தினால் பாணாவிடையென அழைக்கப்படுகின்றது.

மரபுவழிக் கதைகளின்படி தவத்திரு மருதப்பு என்பவர் 1910இல் தமிழ் நாட்டில் இராமேஸ்வரம் எனும் திருப்பதியில் தங்கியிருந்தவேளை இரா மேஸ்வரப் பெருமான் அவரின் கனவிலே தோன்றி மேற்குறிப்பிட்ட ஆலயத் தின் மூல லிங்கத்தைக் காட்டிப் புங்குடுதீவிலுள்ள என்னைத் தரிசித்து அருள் பெறுவாய் என அசரீயாகக் கூறி மறைந்தார். சுவாமிகள் கண்ணப்ப நாயனார் போன்று அடிமையானார். 1911இல் இந்நிகழ்வு நிறைவேற்றப் பட்டது. மருதப்பு சுவாமிகளுக்கு அவ்வூரில் வாழ்ந்த சிவத்தொண்டரான மாணிக்கம் என்பவர் உறுதுணையானார். ... அன்னபூரணியிடமிருந்து ஆலயத்திற்கு மு... சாதனமாக பெற்றுக்கொடுத்தார். திருமாணிக்... போல தண்ணீர்ப்பந்தல் போன்ற சிவப்ப... இவ்வாலயத்தில் முதலாவது கும்பாபிஷேக... மருதப்பு சுவாமிகளின் வழிகாட்டலில் ஒரு பரி... அச்சபையின் தலைவாரக திரு. ஆ. மாணிக்க... ஆறுமுகமும் பொருளாளராக திரு. சு. குமார... மீண்டும் 2ஆவது தடவை 1980இல் கும்... அப்பொழுது சட்டத்தரணி திரு. எஸ். கே. ... திரு. ந. இராசதுரை பொருளாளராகவும் ... அமைக்கப்பட்டது.

1991இல் புங்குடுதீவில் ஏற்பட்ட இடப்பெ... பாதிக்கப்படவில்லையாயினும் இராமலிங்கேஸ்... பெருமானின் ஆலயத்தை சிறந்த விலாசமாக... விழைந்தனர். ஒரு பரிபாலன சபையையும் ... தலைவராக டாக்டர் ஆ. பேரின்பநாதனு... வைரமுத்துவும் பொருளாளராக திரு. ந. இரா... சண்முகலிங்கம் பொதுப் பிரதிநிதியாகவும் ... இச்சபையின் கிளைகள் கொழும்பிலு...

**கும்பாபிஷேக விழா நிகழ்ச்சிகள் (24.03.2002) இன்றைய தினம் ...**
**...யாழ்.சேவையிலும் காலை 5.30 மணிமு...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2046)

சிவமயம்

# வு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானம்



# ஸ்ரீ இராமலிங்கேஸ்வரப் பெருமான் ஆலய

# ப் பெருவிழா சிறப்புமலர்

03~2002



## இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சரின் வாழ்த்துரை

ஈழத்து இராமேஸ்வரம் என்று போற்றப்படும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் கோயில் சிவபூமியாகிய இலங்கையில் காலத்தால் மூத்த சிவ ஸ்தலங்களில் ஒன்று, 1911ஆம் ஆண்டு சிவக்கன்று மருதப்பு சுவாமியவர்கள் தென்னிந்திய இராமேஸ்வர இராமநாதனது கட்டளைப்படி இங்கு வந்து பல நூற்றாண்டுகளுக்கு முன் பழைமை வாய்ந்த தான் தோன்றீஸ்வரரை இராமலிங்கேஸ்வரராய்க் கண்டார். இதனால் இது ஈழத்து இராமேஸ்வரமெனப் பெயர்பெற்றது. இன்று கோடிக்கணக்கான ரூபா செலவில் கலைக் கோயிலாக்கப்பட்டு புதிய அழகொழுகு சித்திரத்தேர் திருப்பணிகளை நிறைவுசெய்து குடமுழுக்குக் காண்பது சைவமக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும்.

**திரு.தியாகராசா மகேஸ்வரன்**
**இந்து சமய விவகார பிராந்திய அலுவலகம்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## அன்னையின் அருளாசியுரை.....

இந்த ஆலயத்தில் அறப்பணிகளும், திருப்பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் நன்கு அறிவேன். திருப்பணிகள் யாவும் நல்லபடி நிறைவேற்றப்பட்டு குடமுழுக்கு விழா, சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா, அருளமுதம் மலர் வெளியீட்டு விழா ஆகியவை சிறப்பாக நடைபெற எல்லாம்வல்ல சிற்பரம்பொருளை வணங்குகிறேன். திருக்கோயில்கள் மூலம் அறப்பணிகளை வளர்ப்போம். எமது சிந்தனைகளை நல்ல எண்ணங்களால் உயர்த்துவோம்.

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
**சமாதான நீதிவான்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

## ...நாட்டில் நல்ல தீர்வுவர ...ஸ்வரத்தானைப் பணிவோம்

...வரத்தில் குடமுழுக்கு நடக்கட்டும்
...சத்தில் விரைவாக விடிவு பூக்கட்டும்
... துயரங்கள் எல்லாம் ஒழியட்டும்
...கம் இம்மண்ணில் பொலியட்டும்
... வளம்பெருகி நடக்கட்டும்
...ங்கு மாண்போடு மலரட்டும்
... நிறைந்து விளங்கட்டும்
...ழ்வு ஈழத்தமிழ்நிலத்தில் பெருகட்டும்

... இராமலிங்க சுவாமியின்
...ருக்கோயிலில் குடமுழுக்கு நிகழ்கிறது
...நகர் புதுக்கோலத்தால் பொலிகிறது
...ணாவிடை ஈசன் திருவருள் பெருகிறது
...துயர் தீர்க்கும் பாணாவிடையப்பன்
...ம் தீவகத்தில் தான்தோன்றீஸ்வரராய் எழுந்து
... விளைத்து எமையெல்லாம் காக்கும்
...ருமானாய்ப் புங்கைப் பொற்பதியில் அமர்ந்தாரே!

**...வரகவி காரை.எம்.பி.அருளானந்தன்**
**...ஈழத்தமிழர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

## சோபனக் குடமுழுக்குக் காண வாரீர்!

ஈழத்து ராமேஸ்வ ரத்த லமாம்
ஈசனவன் பூங்குடியின் பாணா விடை
ஆழத்துக் கடல் சூழும் கோயில் கொண்டான்
அற்புதஞ்சேர் சதுர்கோண லிங்க மானான்
வேழத்துக் கணபதியும் கந்தன் விஷ்ணு
வள்ளிகுஞ் சரியார்பை ரவமூர் த்தி
சூழல்பர் வதவர்த்த னிராம லிங்கச்
சோபனக் குடமுழுக்குக் காண வாரீர்!

தான்தோன்றி ஈஸ்வரப்பேர் தரித்த ஐயன்
தண்ணருளால் பாணாவிடைச் சிவனு மானான்
மான்தோன்றும் மழுத்தோன்றும் துடியும் தோன்றும்
மலர்க்கரத்தால் மருதப்பர் சிவத்தின் கன்று
தேன்போலத் தேவாரப் பாகும் அந்தத்
தெய்வீக மதியா பரணம் காண
வான்நின்று பர்வதவர்த் தனியா ளோடு
வழங்கும்அருட் குடமுழுக்குக் காண வாரீர்!

மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ **ந.வீரமணி ஐயர்.**

## ஆலய பிரதம குருமணியின் அருளுரை....

ஸ்தப தீவுகளில் ஒன்றாக விளங்கும் புங்குடுதீவு பாணாவிடை பர்வத வர்த்தனி சமேத இராமலிங்கேஸ்வரப் பெருமானுக்கு ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதிமிக்க புதிய கலைக்கோயில் அமைப்போடு, புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு குடமுழுக்குக்காணும் நிகழ்வு இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெற திருவருள் கைகூடி இருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்நிகழ்வு ஒரு வரலாற்றுப் பதிவே. இதனை முன்னின்று செயற்படுத்திய நிர்வாக்தினரின் ஆளுமை தெய்வச் செயலேயாகும். இந்தக் கோயில் புதுப்பொலிவு பெற்று விளங்குவது எம்பெருமானின் திருவருளாகும்.

**சிவாகம கலாநிதி, பிரதிஷ்டா கிரியா கலாபமணி, வேத சிவாகம பிரதிஸ்டா சரஸ்வதி, சிவாகம வாசஸ்பதி, தேவாகம மாமணி, சிவாகம விநாயகர் ஞானதிஷா நாம் ஈசான் சிவாசாரியார்**
**சிவஸ்ரீ வை.மு.பரமசாமி குருமணி.**
**உத்தரக்கோவை.**

## கலைப்பீடாதிபதியின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணத்தில் சப்த தீவுகளில் ஒன்றாக விளங்கும் புங்குடுதீவு சுவர்ணதாத்ரி எனச் சிறப்பிக்கப்படும் தலமாகும். இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கின்ற பாணாவிடை பர்வத வர்த்தனி சமேத இராமலிங்கப் பெருமானுக்கு இன்று புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

இப்பிரதேசத்தில் வாழும் சைவ அன்பர்களினதும், ஆலய பரிபாலன சபையினரதும் அரும்பெரும் முயற்சியினால் வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயத்தினுடைய திருப்பணிகள் நிறைவேறி மகா கும்பாபிஷேகத்தைக் காணும்பேறு சைவப் பெருமக்கள்செய்த தவப்பயனால் கிட்டியுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள பழைமை பொருந்திய சிவாலயமாகிய இத்தலம் ஈழத்து இராமேஸ்வரம் என்று போற்றப்படுகின்றது. அத்தகைய பெருமை பொருந்திய எம்பெருமானினது மஹா கும்பாபிஷேகத்தோடு அடுத்து நடைபெறவிருக்கின்ற மஹோற்சவத்திற்கென புதிய சித்திரத் தேர் ஒன்றும் உருவாக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் ஆலயத்தின் தூல லிங்கமாக விளங்கத்தக்க சப்ததள இராஜகோபுர அத்திபாரமிடலும் இடம்பெறவிருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும். இப்பிரதேச யுத்த அனர்த்தங்களினால் சிதைவுற்றிருந்த ஆலயம் மீண்டும் திருப்பணிகள்மூலம் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றமை எமக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய விடயமாகும்.

இக்கும்பாபிஷக கைங்கரியத்தில் தம்மை இணைத்துக்கொண்ட ஆலய பரிபாலன சபையினருக்கும், சைவ அன்பர்களுக்கும் எல்லாம்வல்ல இராமலிங்கப் பெருமானுடைய தெய்வீக சாந்நித்தியத்தின் பயனால் சிறந்த வாழ்வு கிட்டவேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். அத்துடன் இக்கும்பாபிஷேகத்தினால் எங்கும் சாந்தியும், சமாதானமும் சுபீட்சமும் கிட்டுவதாகுக என எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**பேராசிரியர்,**
**கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்.**
**இந்து நாகரிகப் பேராசிரியர்,**
**கலைப்பீடாதிபதி,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## ...ஸ்வரர் ஆலயம் ...ட்டம்

...துணையானார். அவர் தனது சகோதரி ...ஆலயத்திற்கு முன்னுள்ள காணியை தர்ம ...தார். திருமாணிக்கம் அவர்கள் அப்பூதியடிகள் ... போன்ற சிவப்பணிகளை செய்துவந்தார். ...து கும்பாபிஷேகம் 1948இல் நடைபெற்றது. ...ாட்டலில் ஒரு பரிபாலன சபை அமைக்கப்பட்டு ...திரு. ஆ. மாணிக்கமும் செயலாளராக திரு. மா. ...க திரு. சு. குமாரசுவாமியும் தெரிவானார்கள். ... 1980இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. ... திரு. எஸ். கே. மகேந்திரன் தலைவராகவும் ...ளாளராகவும் கொண்ட பரிபாலன சபை

...ற்பட்ட இடப்பெயர்வின்பின் கோயில் பெரிதும் ...ம் இராமலிங்கேஸ்வரரின் அடியார்கள் மத்தியில் ...றந்த விலாசமான கலைக்கோயிலாகக் காண ...ன சபையையும் அமைத்தனர். இச்சபையின் ... பேரின்பநாதனும் செயலராக திரு. பொ. ...ராக திரு. ந. இராசதுரையும், திரு. எஸ். கே. ...ரதிநிதியாகவும் மக்களால் தெரிவானார்கள். ...ள் கொழும்பிலும், புலம்பெயர்ந்து வாழும்


ஆலய முகப்பு

இவ்வூரைச் சேர்ந்த வெளிநாடுகளிலுள்ள அன்பர்களாலும் அமைக்கப்பட்டுள்ளன. இச்சபையினரே ஒன்றரைக் கோடி ரூபா செலவில் சிறந்த கலைக் கோயிலையும், சித்திரத்தேர் நிர்மாணம், மூலஸ்தானம் பரிவார மூர்த்திகளின் ஆலயங்கள் முதலிய திருத்தியும் புதிதாகவும் ஆகம முறைப்படி அமைத்துள்ளனர். ஆலயத்தின் திருப்பணிகளை செய்துவருவோரில் மேற்குறிப்பிட்ட திருமதி அன்னபூரணியின் மகனான செல்லப்பரின் மகன் நாகராஜாவின் தவப்புதல்வன் ஜெயக்குமார் (பாபு) சுவிஸ் நாட்டிலே தானும் நண்பர்களும் சேர்ந்து குறிப்பிடத்தக்க தொகையை ஆலயத்திற்கு வழங்கியுள்ளனர். இவ்வகையில் திரு. நா. ஜெயக்குமார் பாராட்டுக்குரியவர். இவ்வாலயத்தின் மூன்றாவது குடமுழுக்கு விழாவும், சித்திரத் தேர் வெள்ளோட்டமும், சப்த தள இராஜ கோபுர அத்திபாரமிடலும் (இன்று 24.03.2002) நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

இவ்வேளையில் நாட்டில் அமைதி ஏற்படும் சூழ்நிலை உருவாகிவருவதும் எம் பெருமானின் திருவருளே. இவ்வேளையில் திருப்பணிகளுக்குக் குடமுழுக்கு விழாவுக்கு உதவியவர்களுக்கு, இப்பணிகளை சிறப்புற நிறைவேற்றி வருகின்ற பரிபாலன சபையினருக்கு தலைவர் டாக்டர் ஆ. பேரின்பநாதன் அவரது அயராத முயற்சி குறிப்பிடத்தக்கவை. அனைவருக்கும் பர்வதவர்த்தனி சமேத இராமலிங்கேஸ்வரர் திருவருள் பாலிப்பாராக.

*- ஓர் அன்பன்.*

**மலர் அமைப்பு:**
**காரை. எம்.பி.அருளானந்தன்**

**... தினம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையிலும்,**
**... மணிமுதல் நேரடியாக ஒலிபரப்பப்படும்.**

***- பரிபாலன தர்மகர்த்தா சபையினர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிப்பொன் (NIPPON)
## மின் சிக்கன மின் குமிழ்கள்

நாடளாவிய ரீதியில் பிரசித்தி பெற்றது



உங்கள் மின் கட்டணத்தில் 80% சேமியுங்கள்

ஒரு வருட உத்தரவாதம்

கலர் பல்புகளும் உண்டு

16 க்குமேற்பட்ட வகைகள்

மோட்ரோல்லா ரான்சிஸ்டர் THERMAL FUSE

LANKA NIPPON

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar),
BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


உ

## திருவெண்காடு ஆலவிருட்சம் ஸ்ரீ வீரபத்திர சுவாமி சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம் ஆதீகங்கள்

எவர் எவர் எந்தெந்த மார்க்கத்தைக் கைக்கொண்ட போதிலும் இறுதி இலட்சியம் ஒன்றுதான் என்பதை உணர்த்தும் தலங்கள் இக்காலத்தில் உலகெங்கினும் இருக்கத்தான் செய்கின்றன. எங்கள் சிறிய இலங்கையிலும் கானக மத்தியில் விளங்கும் கதிர் காமம், வானுறவோங்கும் சிவனொளிபாதம், வங்கம்மலி மாதோட் டத்து திருக்கேதீச்சரம், கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த - கோணேச்சரம், முன்னேஸ்வரம், புலநரிச்சிவன் கோயில்கள், கொழும்பு மாரியம்மன் ஆலயம், பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், வடஇலங் கையிலுள்ள செல்வச்சந்நிதி, நயினாதீவிலுள்ள - நாகேச்சரம், வல்லிபுரத்திலுள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயம், நாகர்கோயிலிலுள்ள நாகதம்பிரான், இவைகள் கானக மத்தியில் அமைந்து, சைவப் பெருமக்களால் வழிபடும் பெருமைவாய்ந்த ஆலயங்கள் ஆகும்.

இவ்வாலயங்கள்போன்று கானகமும், வெண்மணல் மேடுகளும், களனிவயல் சூழ்நிலமும் ஆலவிருட்சத்துடன் நாவல் விருட்சமும் ஒன்றிணைந்து குடைபோல் நிழல் நிரப்ப **திரு வெண்காடு** எனும் பதியில் ஸ்ரீ வீதபத்திர சுவாமி சமேத ஸ்ரீ ஞான வைரவப் பெரு மான், பரிவார மூர்த்தங்களாக இடப் பக்கத்தில் கஜகணபதி, வயலூர் முருகனும், வலப்பக்கத்தில் நரசிம்ம வைரவர், காளிதேவி அமர்ந்து மூலஸ்தானத்தில் அருள்பாலிக்க, வசந்த மண்டபத்தில் தெற்கு நோக்கி ஸ்ரீ நாகஈஸ்வரி அம்மனும் கிழக்குப் பக்கமாக காளமாமுனி - காளி மேற்கை நோக்கி இவ்வாலய மூர்த்திகளுக்கு காவல் செய்து அருள் பாலிப்பது இத் **திருவெண்காடு** தேவஸ்தானத்தின் சிறப்பாகும்.

குடத்தனை அம்மன், தேவஸ்தான பரம்பரை அறங்காவலர்
மா.கனகராசா

(2004)

## 31ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

வையத்துள் அறிமுகம் 05 ♦ 10 ♦ 1927



தெய்வத்துள் சங்கமம் 22 ♦ 02 ♦ 2002

## அமரர் சண்முகம் கணபதிப்பிள்ளை

**இன்முகம் காட்டி இன்மொழி பேசி**
**நன்னெறியில் வாழ்ந்துகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே!**
**இமை மூடி விழிக்கும் முன்னே இவ்வுலகில் எங்களைத் தனிமையில்**
**தவிக்க விட்டுவிட்டு கணப்பொழுதினில் ஓடி மறைந்தீரே!**

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தியறிந்து உடன் வந்து எமக்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*யாமாளை,*
*சுழிபுரம்.*
(2005)
**குடும்பத்தினர்.**

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் பங்குனித்திங்கள் 10ஆம் நாள்(24.03.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.16 மணிமுதல் 10.46 மணிவரையுள்ள(பழைய நேரம்) பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

**எமது சிரேஷ்ட புதல்வன்**
**திருநிறை செல்வன்**
**சாந்துகுமார்**
*(உரிமையாளர், விவேகா நகையகம். யாழ்.)*
**அவர்களுக்கும்**

**எமது சிரேஷ்ட புதல்வி**
**திருநிறை செல்வி**
**ஸ்ரீகுமாரி**
*(ஆசிரியை - ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி - புத்தூர்)*
**அவர்களுக்கும்**

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர், சிவன் ஆலய திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு: மணமகன் இல்லத்தில்
(24.03.2002) மாலை 3.00 மணி(பழைய நேரம்)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி த.இராசலட்சுமி
*மண்கும்பான் மேற்கு,*
*5ஆம் வட்டாரம், மண்கும்பான்.*
*(83, அரசடி வீதி, நல்லூர், யாழ்.)*

*(இருவீட்டார் அழைப்பு)*

திரு.பொன்னையா சீவரத்தினம்
*கிழுவானை ஒழுங்கை,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

(2031)

உ

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

இறையருள் முன்னிற்க பெரியோர்களின் நல்லாசிகளுடன் நிகழும் மங்களகரமான விஷு வருடம் பங்குனிமாதம் 16ஆம் நாள்(30.03.2002) சனிக்கிழமை முற்பகல் 10.30 ~ 12.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

**எமது புத்திரன்**
**திருநிறை செல்வன்**
**ஈஸ்வரகுமார்**
**அவர்களுக்கும்**

**எமது புத்திரி**
**திருநிறை செல்வி**
**ஜனனி**
**அவர்களுக்கும்**

*(The Decorium 22 Western Road, Wood Green, London No 22)* டெகோறியம் 22, வெஸ்ரேன் றோட், வூட் கிறீன், லண்டன் 22இல் திருமணம் நடைபெறவுள்ளது என்பதனை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

திரு.P.பத்மநாதன்
திருமதி இந்திரா பத்மநாதன்
விசாக றோட்,
கொழும்பு ~ 4

டாக்டர் S.புவிராஜசிங்கம்
விசுவர் வளை, சரசாலை.
திருமதி ஜெகதீஸ்வரி புவிராஜசிங்கம்
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

**14, Gratom close**
**Woreester Park,**
**Surrey**
**K T 47 JY**
**T.P. 0208224 5025**

*தகவல்:*
**M.Puvanenthiran**
**A.L.T. Hory P.C**
**Neervely.**

(1991)

**76, Rating Lane**
**Barrow in Fumers**
**Cumlria.**
**LA 13 9 LD**
**T.P. 01229821621**


HERO CYCLES

HERO CYCLES H HERO



01. சர்வதேசரீதியில் ISO 9001சான்றிதழ் பெற்றதும், இலங்கையில் அதிகமாக விற்பனையாகும் சைக்கிளுமாகும்.
02. எட்டு வருடகாலம் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள ஒரே ஒரு சைக்கிளாகும்.
03. டைமண்ட், ஸ்போட்ஸ் சைக்கிள்களுக்கு கரியர், லொக், பெல், ஸ்டாண்ட் ஆகிய உதிரிப்பாகங்கள் இலவசமாக வழங்கப்படும்.
04. ஹீரோ சைக்கிள் வாங்குபவர்களுக்கு இலவசமாக சிங்கப்பூர் போய் வரவும், இருபதாயிரத்துக்கும் அதிகமான பரிசில்களை வெல்லக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளது.

ஒவ்வொரு விதமான ஹீரோ சைக்கிள்கள், உங்கள் அருகில் உள்ள விற்பனையாளர்களிடம் இப்போதே பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க: 074-716374 அல்லது 01-384254

HERO CYCLE

Sole Agents :
Faizal Hardware Stores
74, Dam Street, Colombo 12.
Phone : 433727, 423273, 384250-3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி தேவஸ்தானம்

## புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புமலர்

## இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

அராலி வடக்கு மயிலியற்புலம் பதியில் எழுந்தருளி வீற்றிருக்கும் முருகப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். அராலி மக்களின் வழிபடுதெய்வமாக விளங்கும் முருகன், இன்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய அனைத்து சம்பத்துக்களையும் வாரிவழங்கிக் கொண்டிருக்கின்றார். கலியுக வரதனாகிய கந்தப்பெருமான் வேண்டுவார் வேண்டுவதை ஈவதற்காகவே "ஒருதிருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய" என்றபடி அருள்மாரி பொழிகின்றார்.

மனிதப் பிறவி எடுத்த பெரும்பயன் மஹா கும்பாபிஷேகம காணுதலாகும். எனவே, 12 ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறும் இந்த குடமுழுக்கு விழா எனும் பெருஞ்சாந்தி வைபவம் நாம் காண்பதற்குக் கொடுத்து வைத்திருக்கவேண்டும்.

உள்ளமும் உடலும் புனிதமடையச் செய்யும் இந்த மஹா கும்பாபிஷேகம் சிறப்புற அமைய உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாச்சாரியார்கள், ஆலய தர்மகர்த்தாக்கள் அனைவருக்கும் முருகப்பெருமான் திருவருள் கடாட்சம் கிடைப்பதாக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பராமாசார்ய சுவாமிகள்**
**2ஆவது குருமஹா சந்நிதானம்**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**

### ஆலய குருக்களின் ஆசியுரை

அராலி வடக்கு மயிலியற்புலம் பதியில் வீற்றிருக்கின்ற முருகன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வள்ளி, தெய்வானை சமேதரராக அடியவர்க்கு அனுக்கிரகித்துக் கொண்டிருக்கின்ற முருகனுக்கும் விநாயகர், அம்பாள், நவக்கிரக நாகம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கு பாலஸ்தானம் செய்து இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேகம் செய்வதற்கு பிரதம குருவாக அவன் அருள் கிடைத்தது நான் பெற்ற பாக்கியமே. மிக விரைவாக நடைபெற்று வந்த இந்தத் திருப்பணி மேன்மேலும் வளர்ந்து, சிற்பரத திருப்பணியும் பூர்த்தியாகி இப்புனித ஆலயத்தை அலங்கரிக்க என் இனிய ஆசிகள்.

**சிவஸ்ரீ செல்வகுமார குருக்கள்**
அராலி வடக்கு,
மயிலியற்புலம் கந்தசுவாமி தேவஸ்தானம்.



### கலைப்பீடாதிபதியின் ஆசியுரை

யாழ்ப்பாணத்தில் உள்ள அராலி வடக்கில் மயிலியற்புலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் கலியுகவரதனாகிய ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு இன்று (24.03.2002) ஞாயிறு சுபவேளையில் பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். எம்பெருமானுக்கு நடைபெற இருக்கும் இக்கும்பாபிஷேகத்தைக்காணும் பேறு நாம் செய்த புண்ணியமே ஆகும்.

எம்பெருமானது ஆலயத்திற்கு அடியார்கள், வெளிநாட்டு அன்பர்கள் மனமுவந்து அளித்த நிதியைக்கொண்டு திருப் பணி வேலைகளை நிறைவு செய்துள்ளமை மிகச் சிறப்பான அம்சமாகும். பொருள் உதவி, சரீர உதவி, பெரு மனதோடு தொண்டு செய்தவர்கள் ஆகிய அனைவரும் எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாவர். இத்திருப்பணிக் கைங்கரியத்தால் இந்த ஆலயம் புதுப்பொலிவு பெற்று விளங்குவது அனைவரது உள்ளத்திலும் புத்துணர்ச்சியை ஊட்டுவதாகும். ஆகம மரபில் உருவாகியுள்ள இவ்வாலயத்தில் திருப்பணிகள் நிறைவுபெற்று நடைபெறும் கும்பாபிஷேகத்தினால் எம்பெருமான் தெய்வீகப் பொலிவோடு சாந்நித்தியம் பெற்று விளங்குவதால் எம்மைப் பீடித்த இன்னல்கள், துயரங்கள் அனைத்தும் நீங்கி அனைவருக்கும் நல்வாழ்வு கிட்டுவது திண்ணம். இக்கும்பாபிஷேக கைங்கரியத்தினை நிறைவுசெய்த பரிபாலன சபையினர் மற்றும் திருப்பணியை நிறைவேற்றிய அடியார்கள் ஆகிய அனைவருக்கும் எம்பெருமானின் திருவருள் பொலிவ தாக என் வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பேராசிரியர் **ப.கோபாலகிருஷ்ணஐயர்,**
**இந்து நாகரிகப் பேராசிரியர், கலைப்பீடாதிபதி,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### துர்க்கா துரந்தரியின் ஆசியுரை

மேற்படி ஆலயத்தில் இன்று நடைபெற இருக்கும் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எல்லாம்வல்ல கந்தப் பெருமானுக்கு குடமுழுக்கு நடைபெற இருப்பதையறிந்து நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

எங்கள் ஆலயத்தோடு தொடர்புபட்ட அந்தணப் பெருமக்களில் ஒருவர்தான் பிரதம குருக்கள் ஆகவும் இக்குடமுழுக்கு வைபவத்தில் இடம்பெறுகிறார் என்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தியாகும். மனித வாழ்க்கையில் இன்றியமையாத பணி ஆலயப் பணியாகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாக்கியம் இதனை உணர்த்துகிறது. எனவே மேற்படி குடமுழுக்கு விழாவை நல்லபடி வாழ்த்தி இவற்றில் ஈடுபட்ட அனைவரையும் மனமாரப் போற்றி அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
**சமாதான நீதிவான்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

### ஆலய நிர்மாணியின் ஆசி

மயிலைக்கந்தன் அருள் ஆசியுடன் பாலஸ்தாபனம் செய்து, ஆலய நிர்மாண வேலைகள் திறம்பட செய்வதற்கு அருள்புரிந்தவரான கந்தவேட் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று, யாவரும் இன்னல்கள் நீங்கி நாட்டில் அமைதியும் சமாதானமும் மலரவேண்டுமென எல்லாம்வல்ல எம்பெருமானின் பாதாரவிந்தங்களைத் தொழுதுவேண்டுகின்றேன்.

**மா.திரவியராசா**
**ஆலய நிர்மாணம்.**

### பரிபாலனசபைத் தலைவரின் ஆசி

தம்மை வழிபடுவோருக்கு தன் அருள்காட்சியைக் கொடுக்கும் பொருட்டு இறைவன் உறையும் இடங்கள் திருக்கோயில்களாகும். அவ்வகையில் மயிலியற்புல முருகனும் சகலருக்கும் அருள்பாலித்து வருகின்றார்.

இன்று கலியுக வரதரனாம் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமானுக்கும் ஏனைய பரிவாரத் தெய்வங்கள், மகாமாரியம்மன், நாகராசா ஆகிய தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற அருள் கிடைத்தமை பெரும் பாக்கியம் ஆகும். மேற்படி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் அனைவரும் சீருஞ்சிறப்பாக வாழவேண்டும் எனவும் வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**திரு.க.நாகஜெயகுமாரன்.**
**பரிபாலன சபைத் தலைவர்.**


(2013)
**லிங்கம்**
**கிறீம் ஹவுஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நாதன்**
புடைவை அகம்
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

இம்மலர் மலர உதவிக்கரம் தந்த நல்லோரை அன்பர்கள் ஆதரிப்பீர்களாக!

**ரேவதி ஜுவல்லறி**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வெ.அழகுரத்தினம்**
**மதராஸ் ஜுவல்லறி**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பிரபா நகைமாடம்**
கரவெட்டி கிழக்கு,
கோவிற்சந்தை,
பருத்தித்துறை.

**சி.இராசையா**
**மதராஸ் ஜுவல்லறி**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**புலவர் வீடியோ**
கோண்டாவில்.

**N.கிருபானந்தன் (சிவா)**
வர்ண வேலைக்
குழுவினர்,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

**வேல்முருகன்**
**சைவ உணவகம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

*ஜெயா*
தொலைத்தொடர்பகம்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
T.P.No.070-212502.

**ராஜா கிறீம் ஹவுஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**எரிக் கணேஷ்**
மூக்குக் கண்ணாடியகம்,
பல்கட்டும் இடம்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.
கிளை: 91, K.K.S. வீதி, கொக்குவில்.

**ஜீவா மிக்ஷர்**
பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

**சிவா வைத்திய நிலையம்**
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
கிளை: 551, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.


## ஸ்ரீ பரமானந்த சுவாமிகள்
# குருபூசை தினம்

ஸ்ரீ பரமானந்த சுவாமி அவர்களின் 7ஆம் வருட குரு பூசை தினம் நாளை (25.03.2002) திங்கட்கிழமை காலை வதிரி, கரவெட்டியிலுள்ள ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறும்.

குருபூசையானது ஆச்சிரமத்தில் உள்ள முருகன் ஆலயத்தில் காலை 9.00 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி, சுவாமியின் சமாதியில் ஆராதனை, திருமுறை ஓதல், பஜனை ஆகியவற்றைத் தொடர்ந்து மாகேஸ்வர பூசையுடன் நிறைவுபெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அன்றைய நிகழ்வுகளில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

- தர்மகர்த்தா சபையினர்.

***ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்,***
*வதிரி, கரவெட்டி.*

(சி/21246)


**படிவம்**

அரச எழுதுநர் சேவைக்கான விணைபபப படிவங்கள்இன்றும் (23.03.02) ஞாயிறு விற்பனை செய்யப்படும்.
*(வர்த்தமானி பார்வைக்கு உண்டு)*
**பாரதி பதிப்பகம்**
*430, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/21268)


**உடுநகர் சனசமூக நிலையம், உடுப்பிட்டி**

## புதிய கட்டடத் திறப்பு விழா

இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புதிய கட்டடம் திறந்துவைக்கப்படும்.

(2033) திரு.த.வஸ்தலகுமாரன் *(செயலாளர்).*

உ
சிவமயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷ வருடம் பங்குனி மாதம் 2ஆம் நாள்(16.03.2002) சனிக்கிழமை முருகனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி

**திருமதி இராஜேந்திரக் குருக்கள் - சாம்புநாதேஸ்வரி அம்மா**

அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 25.03.2002 | திங்கட்கிழமை | பகல் | 10 மணி | தசாகம் |
| 26.03.2002 | செவ்வாய்க்கிழமை | பகல் | 10 மணி | ஏகோதிட்டம்+மாசிகம் |
| 27.03.2002 | புதன்கிழமை | பகல் | 10 மணி | சபிண்டீகரணம் |
| 28.03.2002 | வியாழக்கிழமை | நண்பகல் | 12 மணி | கிருஹயக்ஞம் |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி முருகனடி சேர்ந்த அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

*நீர்வேலி.*

(2039) - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய விளைபொருள் பதனிடும் நிலையத் திறப்பு விழா நாளை

விவசாய விளைபொருள்கள் பதனிடும் நிலையமான 'ஜசுமி'யின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடைபெறும்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவு சங்கம் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் ஆதரவுடன் இந்நிலையத்தை புதிதாக அமைத்துள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் மேரி பிரான்ஸ் பக்னியாவும் புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவும் கலந்துகொள்கின்றனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதனும் பட்டினிக்கெதிரான நிறுவனத் தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பஸ்கல்லையும் கலந்துகொள்கின்றனர். (ம-10-5)


## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



தமிழினத்தின் வாழ்வுக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் வழிகாட்டியாகத்திகழும் துணைவேந்தர் பேராசிரியர்

**பொன்.பாலசுந்தரம்பிள்ளை**

அவர்கள் நீடித்த வாழ்வும் வளமும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

அ.மு.அருணாசலம்
*அதிபர்,*
*மெ மோறியல் கல்லூரிக் குடும்பம் சார்பாக.*

(2064)

## விற்பனைக்கு உண்டு

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட முதல் தரமான வெள்ளை எள் விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-*

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.021-2813

(C/21265)

இன்று நிறைவு நாள்

நம் பாவங்களை அவரே சுமந்தார்
நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே
(1பேதுரு 2:24)

## திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை

# கல்வாரி யாகம்

மன்ற அரங்கில் (திருப்பாடுகளின் காட்சி) மாலை 6.45 மணி

**இன்று (24.03.2002) ஞாயிறு**

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

**அன்பளிப்பு: 20.00**

கல்வாரிப் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- திருமறைக் கலாமன்றம்.

*238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P.: 021.2393 Internet - www.cpateam.org* (சி-21266)

## ஆறாம் மாத நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும்



**அமரர் பெரியதம்பி செல்வநாயகம்**

எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்று பாசத்தோடும் பண்போடும் எம்மை வளர்த்து கல்வியில் ஊக்கமளித்து, எம்மை உயர்நிலைக்கு ஆளாக்கி, 26.09.2001 அன்று இறைபதமெய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம் குடும்ப விளக்கு அணைந்த செய்தி கேட்டு உடனோடிவந்து எமக்கு ஆறுதல் கூறியும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அயலவர், நணபர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- மனைவி, மக்கள்,
*138, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.* மருமக்கள், பேரப்பிள்ளைகள். (205[illegible])


## படையினர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்24

கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலய சுற்றாடல் பகுதிகளில் சில தினங்களுக்கு மக்கள் நடமாடுவதைத் தவிர்க்கும்படி படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

பாடசாலைச் சுற்றாடல் பகுதிகளில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் முழுமையாக அகற்றப்படாததனால் மக்களின் பாதுகாப்பு கருதியே இவ் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பலத்த சேதமடைந்துள்ள இப் பாடசாலை செல்வதற்காகத் தற்போது ஒற்றையடிப் பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ம-5-17)

## குளத்தில் மூழ்கி சிறுவன் பலி

வேலணைப் பகுதியில் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எழுவைதீவைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி முகுந்தன் (வயது-13) என்ற சிறுவனே உயிரிழந்தான்.

சிறுவனின் சடலம் மரண விசாரணை மற்றும் பிரேதபரிசோதனைகளின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஜ-6-9)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.பல்கலைக்கழக பொருளியல், சமூகவியல், வரலாற்றுத் துறைகளைச் சேர்ந்த இறுதி வருட மாணவரில் சுற்றுலா சென்று திரும்பிய மாணவர்களை நாளை திங்கட்கிழமை பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடுமாறு இளம் பொருளியல் மன்றத்தினர் கேட்டுள்ளனர். (ம-ரி)

## அஞ்சலகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

மானிப்பாய் அஞ்சல் அலுவலகம் நாளை திங்கட்கிழமை முதல் இல.181, யாழ். வீதி, மானிப்பாயில் உள்ள புதிய கட்டடத்திற்கு இடம் மாற்றப்படவுள்ளது.

நாளை காலை 8 மணியளவில் இப் புதிய கட்டடம் வடக்கு அஞ்சல் அதிபர் நாயகத்தினால் திறந்து வைக்கப்படும். தொடர்ந்து அலுவலகக் கடமைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

## சிரமதானப் பணி

யாழ்ப்பாணம்,மார்ச்24

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் மற்றும் அதன் சுற்றாடல் பகுதிகளில் இன்று சிரமதானப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இன்று காலை இப்பகுதி மக்களை சிரமதானத்திற்குத் தயாராக வருமாறு ஆலய பரிபாலன சபை கேட்டுள்ளது. இக்கோயில் யுத்த அனர்த்தங்களால் பாரிய சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5-12)


## தேவை

பாண் போடுவதற்கு பாஸ் தரத்தில் உள்ளவர்களும்.
உதவியாளர்களும்.
**SALES**
விற்பனையாளர்களும் தேவை.
உடன் நேரில் வரவும்.
**றொலெக்ஸ் பேக்மாட்,**
**இல.118, கஸ்தூரியார் றோட்,**
**யாழ்ப்பாணம்.**
(2034)

## ஸ்பெஷல்

குங்குமப்பூ புரியாணி
சிக்கன் ரூபா 125 மட்டுமே.
நண்பகல் 12.00 - 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**ஜோ.எகட்டனின்**
**ஜெசித்தாரா விருந்தகம்**
19/2, [illegible]
மகளிர் கல்லூரி முன்பாக
சுண்டுக்குளி.
(2034)



## நன்றி நவில்கின்றோம்

### திருமதி விஜயராணி செல்வராசா

பத்தாவத்தை, இளவாலையைச் சேர்ந்த திருமதி விஜயராணி செல்வராசா அவர்களது மறைவுச் செய்தி கேட்டு, உடன் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் அவரது அடக்கச் சடங்கில் கலந்துகொண்டவர்கள், பல்வேறு வழிகளில் எமக்கு உதவிகள் புரிந்தவர்கள், சிறப்பாக அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பத்தாவத்தை, இளவாலை.* (2054) - குடும்பத்தினர்.

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 13 - 10 - 1925



இறப்பு 22 - 02 - 2002

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும்
ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வேலன் கந்தையா**

**அன்போடும் ஆதரவோடும் பண்போடும் வாழ்ந்தீர்!**
**இன்றோடு முப்பத்தொரு நாள் ஆயிடினும்**
**உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு அகலாது!**
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி!*

இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் அமரரின் நினைவாக நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மண்குழு வீதி,*
*ஊர்காவற்றுறை.* (2052) - குடும்பத்தினர்.


## மரண அறிவித்தல்கள்

### சாள்ஸ் பிரான்சிஸ்

மானிப்பாய், சோதி வேம்படி வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது 26/1, நீற்றா றோட், நீர்கொழும்பில் வசித்தவருமாகிய சாள்ஸ் பிரான்சிஸ் (அன்னபட்சி) 22.03.2002 வெள்ளிக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் இரத்தினகுமாரியின் அன்புக் கணவரும் றோகான் (கனடா), றுக்மன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான திருமதி செல்வரட்ணம், சி.ஜே.லோறன்ஸ் மற்றும் டாக்டர் டேவிட் ஆனந்தன், சுகுமாரன், திருமதி திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (23.03.2002) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நீர்கொழும்பு சி.ஜே.ஐ.சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொலைபேசி இல. 077-633182*
(சி-21263)

தகவல்:
றுக்மன் (மகன்)
நீர்கொழும்பு.

### திருமதி தம்பிராசா சிந்தாமணி

ஐயன்னா வீதி, அம்பளை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா சிந்தாமணி நேற்று (23.03.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் தயானந்தனின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, திருமதி இளையதம்பி பரமேஸ்வரி, காமாட்சி மற்றும் கனகரத்தினம், இராசரத்தினம், திருமதி இராசநாயகம் தங்கமுத்து, திருமதி இரத்தினம் மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயன்னா வீதி,*
*அம்பளை,*
*சுன்னாகம்.* (2058)

தகவல்:
இ.தயானந்தன்
(மகன்).

### கணபதிப்பிள்ளை சின்னப்பு

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னப்பு நேற்று (23.03.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஜெயசீலன் (ஜேர்மனி), ஜெயந்தி (சுவிஸ்), ஜெயமதி (கனடா), ஜெயசிறி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சியாமளா, பவானந்தராசா, சிறிரவீந்திரநாதன், இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரசாலை கொம்பிகுள மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.* (சி-21273)

தகவல்:
திருமதி சி.ஆச்சிப்பிள்ளை
(மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடார வண்டில்களில் குடும்பமாக 'பிக்னிக்' போன அந்தக் காலம்...

**50ஆண்டுகளுக்கு முற்பட்ட குடாநாடு எப்படி இருந்தது என்பதை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லமுயலும் கட்டுரைத் தொடரின் இறுதிப்பகுதி இது.**

கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கும், காங்கேசன்துறையிலிருந்து கொழும்பிற்கும் புகையிரத சேவை இருந்தது. (Coach) கோச்சி என்று அழைப்பார்கள். இது நீராவி இயந்திரத்தால் இயக்கப்பட்டது. நிலக்கரி எரிபொருளாக இருந்தது. இதனால் புகைவண்டி, நிறையப் புகையைக் கக்கியவண்ணமே செல்லும். இதனால் "கரிக்கோச்சி" என்றும் மக்கள் இதனை அழைத்தனர். ஒரு நாளைக்கு ஒருதரம் இது வந்து போகும். இதில் பிரயாணம் செய்யும் போது கரித்துகள்கள் கண்ணில் விழாது பாதுகாக்கவேண்டும். பிரயாணம் செய்வோரின் உடல், உடை என்பன புகைமண்டிப் போகும். புகையிரத நிலையமே இருண்டு காட்சி தரும். பொருள்களை ஏற்றி வருவதற்கு வேறான (Goods Train) சரக்கு வண்டி இருந்தது. இதில்வரும் சரக்குகள், புகையிரத நிலையத்திலுள்ள "சரக்கு நிலையத்தில் (Goods Shes) களஞ்சியப் படுத்தப்பட்டுப் பின்னர் உரியவர்களுக்கு வழங்கப்படும். புகையிரத நிலையம் இப்போதுள்ள இடத்திலேயே அப்போதும் இருந்தது.

உள்ளூர்ப் போக்குவரத்திற்கு முன்னர் குறிப்பிட்ட பேருந்துக் கம்பனிகள் சேவைகளை நடத்தின. தனிப்பட்டவர்களின் பாவனைக்குக் குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் கார்கள் என்பன பாவிக்கப்பட்டன. மிகவசதி படைத்தவர்கள்தான் சொந்தத்தில் கார் வைத்திருந்தனர். வாடகைக் கார்களும் இருந்தன. இவற்றைவிட (Richow) "றிச்சோ" வண்டியும் இருந்தது. இதைத் "தனிநபர் இழு வண்டி" என்றும் சொல்லலாம். தற்போது "சைக்கில் றிச்சோ" பாவனையில் இருக்கிறது. சைக்கிளை இயக்குவதன் மூலம் இது இயக்கப்படுகிறது. சாதாரண றிச்சோவை மனிதனே இழுத்துச்செல்வான். வசதி படைத்தவர்கள் தமது சொந்தத்தில் இவ் வண்டிகளை வைத்து, இழுத்துச் செல்வதற்கெனப் பொருத்தமானவர்களை வேலைக்கமர்த்துவர். பிரபல சட்டத்தரணிகளும், கல்லூரி அதிபர்கள் சிலரும், செல்வந்தர் சிலரும் சொந்தத்தில் வைத்திருந்தனர். வாடகைக்கு விடவும் சிலர் றிச்சோ வண்டிகளை வைத்திருந்தனர். பாடசாலைக்குச் செல்லும் பாலர்கள் இதிற் செல்வர். "றிச்சோ" இழுப்பவர்களை யாரும் கட்டாயப்படுத்துவதில்லை. சொந்தப் பிழைப்பிற்காகவே இந்தத் தொழிலைச் செய்தனர். பிற்காலத்தில் இதனை "ஆண்டான் அடிமை"ப் பிழைப்பாகச் சித்திரிக்கவும் செய்தனர். மிதிவண்டிறிச்சோ வசதி இல்லாத ஒரு காலகட்டத்தில் இது நடைமுறையிலிருந்தது. அவ்வளவுதான்.

பாரம் ஏற்றிச் செல்வதற்கு பாரிய வடக்கன் மாட்டுக் கூடார வண்டில்கள் இருந்தன. கொட்டடி, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை ஆகிய இடங்களிலுள்ளவர்கள் இவ்வண்டில்களை

## 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட குடாநாடு மீது ஒரு பார்வை

வைத்துப் பராமரித்தனர். காலை நேரங்களில் கிட்டங்கிகளிலுள்ள பொருள்களை ஏற்றி வருவதற்காக இவை அணிவகுத்துச செல்வதைப் பார்ப்பதே ஓர் எழிற்காட்சியாக இருக்கும். தற்போதுள்ள சிறிய லொறி ஒன்றில் ஏற்றக்கூடிய பொருள்களை ஒரு கூடாரவண்டியில் ஏற்றலாம். இவ்வண்டில்கள் வீதிகளில் செல்லும் போது சிறிய குடிசைகள் அசைந்து செல்வது போல இருக்கும். தூரத்தில் உள்ள ஆலயங்களுக்குச் செல்வோர் குடும்பமாக இவ்வண்டில்களில் செல்வர். ஒருமுறை இவ்வண்டி ஒன்றில் முருகண்டிக்குக்கூடச் சென்று வந்ததாக எனக்கு ஞாபகம். போகும்போது இடையிடையே தங்கி, மாடுகளைக் காலாற விட்டும், சமைத்துச் சாப்பிட்டும், இளைப்பாறியும் சென்றுவந்தோம். கிட்டத்தட்ட ஏழு, எட்டு நாள்களில் நாங்கள் முருகண்டிக்குச் சென்று திரும்பினோம். இது ஒரு (Picnic) உல்லாசப் பயணமாக அமைந்தது.

### விளையாட்டுக்கள்

உள்ளூர் விளையாட்டுக்களான கிளித்தட்டு, சடுகுடு போன்றன கிராமங்களில் நடத்தப்பட்டன. பாடசாலை அணிகளுக்கிடையே, கரபந்தாட்டம், துடுப்பாட்டம், காற்பந்தாட்டம், தடகள விளையாட்டுப் போட்டிகள் என்பன நடத்தப்பட்டன. பிரபல பாடசாலைகளின் அணிகள் இவற்றில் பங்குபற்றின. உயரம் பாய்தலில் மத்திய கல்லூரி மாணவனாக இருந்த N. எதிர்வீரசிங்கம் என்பவர் அகில இலங்கைச் சாதனையை நிலைநாட்டி, ஆசிய விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்து, ஒலிம்பிக் போட்டியிலும் பங்குபற்றினார்.

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம் (J.S.S.A.)என்ற அமைப்பு பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளை நெறிப்படுத்தியது. முக்கியமாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் வெகுசிறப்பாக நடத்தப்பட்டன. தற்போது பண்ணையிலே தொலைத்தொடர்பு நிலையம் அமைந்திருக்கும் மைதானத்திலே, சுற்று வேலிகள் போடப்பட்டு நுழைசீட்டுக்கள் மூலம் போட்டிகள் நடத்தப்பட்டன. அக்காலத்தில் பாடசாலைகள் இரண்டு நேரம் நடத்தப்பட்டன. மாலைநேரப் பாடசாலை முடிவுற்றதும் போட்டிகள் ஆரம்பமாகும். ஒரு நாளைக்கு இரண்டு போட்டிகளென நடத்தப்பட்டு, அரை இறுதிப் போட்டிகள் மூலம் இரண்டு அணிகள தெரிவுசெய்யப்பட்டு இறுதிப் போட்டிகள் முதலாம், இரண்டாம் அணிகள மட்டத்தில் நடத்தப்படும். எல்லாப் போட்டிகளும் மிக விறுவிறுப்பாக இருக்கும். வயதுபோன குடுமி முடிந்த கிழவர்கள்கூடத் தங்கள் தங்கள் பாடசாலை அணிகளுக்கு உற்சாக மூட்டுவதற்காகச் சவாரி வண்டில்களில் வருவார்கள். இப்போட்டிகளின் போது யாழ்நகரமே களைகட்டிவிடும்.

கொக்குவில், உரும்பிராய், சுன்னாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, மானிப்பாய், இளவாலை போன்ற இடங்களிலிருந்து காற்பந்தாட்ட ரசிகர்கள் வந்து உற்சாகமூட்டுவர். நகர்ப்புறப்பாடசாலை அணிகளுக்கு கொட்டடி, திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, ஆரியகுளம், அரியாலை போன்ற இடங்களிலிருந்து வந்து அனுசரணை வழங்குவர். இவர்களுக கிடையே ஏற்படும் உற்சாக மேலீடுகளால், கோஷ்டி மோதலகளும் சில வேளைகளில் இடம்பெறும். இவை வைரித்த பகையாகவும் மாறிவிடுவதுண்டு. சிறந்த விளை யாட்டு வீரர்களுக்கு மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கிருக்கும். "வீரரை யார் வியவாதார்?"

**நா.க.சண்முகநாதபிள்ளை**

துடுப்பாட்டத்தை யாழ். மத்திய கல்லூரி அதிபர் வெப்ஸ்ரர் என்பவர் 1881இல் முதன் முதலாக யாழ்பாணத்தில் அறிமுகம் செய்துவைதார். அதே கல்லூரியின் மற்றுமோர் அதிபர் கபிரியல் லீஸ் என்பவர் 1894இல் உதைபந்தாட்டத்தை அறிமுகம் செய்துவைத்தார். 1916 ஆம் ஆண்டிலிருந்தே சாரணர் இயக்கங்களும் பாடசாலைகளில் தொடங்கப்பட்டன. தென்னிலங்கையிலிருந்தும் சிங்கள, இஸ்லாமிய, பறங்கி மாணவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் வந்து கல்வி கற்று முன்னேறினர். அன்றியும் யாழ்ப்பாண நகரில் சிங்கள மக்களுடைய பேக்கரிகள், கராச்சுகள் (Garrage) இருந்தன. ஆங்கில ஆட்சிக்காலத்தில் தேசிய இனத்தவர் யாவரும் ஒரு தாய் பிள்ளைகள் போல யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தனர். நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், யார் செய்த பாவமோ தெரியாது படிப்படியாக எமக்கிடையே பகைமையும், வேற்றுமையும் வேரூன்றிவிட்டது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தின் சிறப்பையும், செழிப்பையும் எண்ணிப்பார்க்கும் போது, மீண்டும் அந்த இன்ப வாழ்வு வராதோ! எங்கள் மன அங்கலாய்ப்புகளைத் தீராதோ! என்று எண்ணத் தோன்றுகின்றது. அந்த வாழ்வின் பின்புலத்தையும், செழிப்பையும் ஒரு குறுங்குடுவைக்குள் (Nutshill) தர முயன்றிருக்கின்றேன். இங்கு அச்சிடப்படும் கட்டுரைகள் சிறு கையேடாக வருமாயின் ஒரே வாசிப்பில், ஒரே பார்வையில் விளங்கிக் கொள்ளமுடியும். முன்னுரையில் குறிப்பிட்டது போல விடுபட்டவற்றையும் சேர்த்து முழுமையாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன். ★

முற்றும்.

# தேசிய அரசு நிறுவக் கோருகிறார் பௌசி

கொழும்பு,மார்ச்24

நாட்டின் தேசியப் பிரச்சினையைத தீர்க்கத் தேசிய அரசு உடனடியாக நிறுவப்படவேண்டும் என்று பொ.ஐ. முன்னணியின் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான ஏ.எச்.எம்.பௌசி மீண்டும் கூறுகிறார்.

தேசிய அரசு அமைப்பதற்கு ஆதரவளிக்க பொ.ஐ.முன்னணி எம்.பிக்கள் 25பேர் இன்னமும் தயாராக இருக்கின்றனர் என்றும் அவர் கூறுகிறார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து அவர் கருத்துத தெரிவித்தார்.

இனப்பிரச்சினை, வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற முக்கிய பிரச்சினைகளின் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக்கூற தேசிய அரசு ஒன்று அவசியம்.

அந்த அரசு 15 ஆண்டுகளாவது பதவியில் இருக்கவேண்டும்.

தேசிய அரசின் அவசியத்தை உணர்ந்துள்ள பொ.ஐ.முன்னணி எம்.பிக்கள் பலர் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்க அஞ்சுகின்றனர். ஆனால் எனது கருத்தைத் தெரிவிக்க நான் அஞ்சவில்லை. கட்சியில் இருந்து நீக்கினாலும் என் கருத்தை மாற்றிக்கொள்ளமாட்டேன்.

- இவ்வாறு அவர் கருத்துத் தெரிவித்தார். (ஐ)

## உயிரிழந்த 3 புலிகளின் விவரம்

வவுனியா,மார்ச்24

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி கடற்படையுடன் இடம் பெற்ற மோதலில் தமது தரப்பில் மூவர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப்டினன்ட் யாதவன் (துங்கவேலாயுதம் சோமகாந்தன் - யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்டினன்ட் தணிகைச் செல்வி (இராஜேந்திரம் சுபாஜினி - யாழ்ப்பாணம்), 2ஆம் லெப்டினன்ட் மூவேந்தன் (கணேஷ் யோகநாதன் - புதுக்குடியிருப்பு) ஆகியோரே உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்தனர். (ஐ-3)

# குடாநாட்டில் பொலீஸார் இரவு ரோந்தில் ஈடுபடுவர்

குடாநாட்டில் பணியாற்றும் பொலீஸார் இரவு நேர ரோந்துப்பணிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

தற்போது ஏற்பட்டிருக்கும் சுமுக நிலையை அடுத்து இரவிலும் மக்கள் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. அத்துடன் அதிகரித்துவரும் திருட்டுக்கள் மற்றும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காகவும் இரவு ரோந்தில் ஈடுபடுமாறு பொலீஸார் பணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான உத்தரவை யாழ்.மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க சகல பொலீஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகளுக்கும் விடுத்திருக்கிறார். (ஐ-180)

# சுலோக அட்டைகளை ஏந்தி எதிரணியினர் ஆரவாரம்

ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. நிதியமைச்சர் கே.என். சொக்ஸி, வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றினார். சபை நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்குக் கூடியது. சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமை தாங்கினார். சபையின் வழமையான அலுவல்கள் இடம்பெற்றதை அடுத்து 2.35 மணியளவில் நிதியமைச்சர் சொக்ஸி சபைக்குள் பிரவேசித்தார்.

அப்பொழுது அரசாங்கக் கட்சி பின் [illegible] ஆரவாரம் செய்து அவரை வரவேற்றனர். நிதியமைச்சர் வழமைக்குமாறாக - கறுப்புப் பெட்டிக்குப் பதிலாக - 'பிரவுண்' நிறப்பெட்டியையே சபைக்கு எடுத்து வந்திருந்தார்.

நிதியமைச்சர் சொக்ஸி, 2.37 மணியளவில் தனது உரையை ஆரம்பித்தார். அப்பொழுது எதிர்க்கட்சி பின்வரிசை உறுப்பினர்கள் ஆரவாரமாக எதிர்ப்பு சுலோகங்கள் எழுதப்பட்ட பெல் மட்டைகளை தங்கள் கைகளில் பிடித்திருந்தனர்.

இவ்வேளையில், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் ரத்தனசிறி விக்கிரம நாயக்க, ஏனைய சிரேஷ்ட தலைவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

எதிர்க்கட்சி வரிசையில் பல ஆசனங்கள் காலியாக இருந்தன. சற்று நேரத்தில் எதிர்க்கட்சி பின்வரிசை எம்.பிக்கள் தமது ஆசனங்களில் அமர்ந்துவிட்டனர். (ஐ)

# யாழ். மேயர் கந்தையன் பிரதமருடன் சந்திப்பு!

கொழும்பு,மார்ச்24

யாழ்.மாநகரசபைப் பகுதியில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் யாழ். மேயர் செல்லன் கந்தையன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடினார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதமரைச் சந்தித்த மேயர், மாநகரசபைப் பகுதியில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர திட்டங்கள் குறித்து விளக்கிக் கூறினார்.

இத்திட்டங்களை நடைமுறைப் படுத்தத் தேவையான நிதியை வழங்க நடவடிக்கை எடுப்பதாகப் பர்தமர் உறுதியளித்தார் என்று மேயர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவும் கலந்து கொண்டார். (ஐ-3)

## ஒன்று கூடல்

தென்மராட்சி,மார்ச்24

யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமான பரிசோதகர், மேற்பார்வையாளர் சங்கத்தின் ஒன்றுகூடல் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11.00 மணிக்கு வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் வருமான பரிசோதகர்கள், வருமான மேற்பார்வையாளர்கள் ஆகியோரை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் அ.வாமதேவா அறிவித்துள்ளார். (ம-117)

## லைசென்ஸ் இல்லாத 6 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம்,மார்ச்24

சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் ஓட்டிய 6 பேருக்கு எதிராக நேற்று மல்லாகம் நீதிமன்றில் அச்சுவேலிப் பொலஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த 6 பேருக்கும் அவர்கள் வசிக்கும் பகுதி கிராம சேவகர் ஊடாக அழைப்பாணை அனுப்புமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ம-6)

## மனைவியின் கழுத்தை வெட்டினான் கணவன்

சுன்னாகம்,மார்ச்24

தனது முதற்றார மனைவியின் கழுத்தை வெட்டினான் கணவன். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் ஏழாலை - மயிலங்காடு என்னுமிடத்தில் நடைபெற்றது.

கழுத்தில் வெட்டப்பட்ட மனைவி ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். (ஐ-27)

## 'கடலோசை' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்றத்தின் 'கடலோசை - 02' சஞ்சிகை வெளியீட்டு விழா மன்றத்தின் தலைவர் தி.விக்னேஸ்வரன் தலைமையில் விஞ்ஞானபீட உயிரியற்றுறை மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், வாழ்த்துரையை விஞ்ஞானபீட பீடாதிபதி இ.குமாரவடிவேலும் நிகழ்த்தவுள்ளனர். நூலின் நயப்புரையை தாவரவியற்றுறைத் தலைவர் திருமதி நி.ரவிமன்னனும், வெளியீட்டுரையை கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் கா.சித்திரவடிவேலும் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் பெற்றுக்கொள்வார்.(ஐ-10)

## முல்லைத்தீவில் மகப்பேற்று விடுதி திறப்பு

முல்லைத்தீவு,மார்ச்24

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று விடுதி கடந்த வியாழனன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் சங்கங்களின் நிதியுதவியினால் அமைக்கப்பட்ட இந்த விடுதியை விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரப் பொறுப்பாளர் சி.விக்கி திறந்து வைத்தார். (ஐ-4)

## ஆண்டு விழாப் போட்டிகள்

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 83ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 28ஆம், 30ஆம் திகதிகளில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், பேச்சு, கட்டுரை ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும், 30ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன.

28ஆம் திகதி மாலை ஆண், பெண்களுக்கான கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு பேச்சு, கட்டுரைப் போட்டிகளும் இடம்பெறும்.

சங்க எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்கு பற்றமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி, வீடு தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் கோயில் வீதியை அண்டிய பகுதியில் வீடு அல்லது காணி விலைக்குத் தேவை. விள.இல.1756, மே/பா. உதயன். (2015)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஓட்டுதல் - சகல கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்கன் ஆகியன திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சுநாராயண சாமி, இல.301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி (கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்). (1973)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- வெ.சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய். (2027)

இறைச்சிக் கோழி (Broilers), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். இல.15,6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (1939)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (1862)

தரமான புறொயிலர்கள் தேவையான அளவுகளில் விற்பனைக்கு உண்டு. கிலோவுக்கு ரூபா 20/- குறைக்கப்பட்டுள்ளது. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: S.குமரன், 227, பிரவுண் வீதி (நரிக்குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (2006)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.நஞ்சன், பொற்பதி றோட், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (2023)

## விற்பனைக்கு

Bajaj (New model) ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. T.சசிக்குமார், பெரிய மதவடி, சுன்னாகம் தெற்கு. (2045)

கோண்டாவில் குமரகோட்டம் பகுதியில் 14 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:கா.சாந்திநாதன், மே/பா சி.நா.கந்தப்பிள்ளை, நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (2030)

புதிய தமிழ் Typewriter (FACIT - 18") Door Closer (YALE) என்பன உடன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.ராஜன் (படப்பிடிப்பாளர்), நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (1998)

எம்மிடம் Java Parrots, Pinches, Pigeon (Silver Duck) புறாக்கள், கொண்டைக்கிளி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.60, சேர் பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (1989)

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட 17,21,201 தொடர் இலக்கமுடைய ஓட்டோக்களும், MASSEY FERG USON - 135, உழவு இயந்திரமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஐ.தவகுமாரன், 23, உடுவில் வீதி, மானிப்பாய். (2000)

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட நல்ல நிலையில் உள்ள Autoக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.மகேஸ்வரன், கிறிஸ்தவ கல்லூரி ஒழுங்கை, கோப்பாய். (2050)

நல்ல நிலையிலுள்ள 16 - தொடர் இலக்கமுடைய பஜாஜ் ஓட்டோ உடன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Tநடராஜா, கே.கே.எஸ். வீதி, மல்லாகம் (எரிபொருள் நிலையம் முன்பாக). (2055)

சகல வசதிகளும் கொண்ட பெரிய மாடி வீடும் மற்றும் 403 பேர்ஜே 3ரீ 7000 தொடர் இலக்கமுடைய காரும் உடன் விற்பனைக்கு உண்டு. ஞாயிறுக்கிழமைகளில் முழுநேரமும் பார்வையிடலாம். தொடர்பு: மு.பத்மநாதன், 22/3A, விதானை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (1912)

## கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்24 உசன் இராமநாதன் மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-4)

---

# சிரம் தாழ்த்தி வரவேற்கிறோம்

தமிழ் இனத்தின் காவலர்களே....!
எம் மண்ணின் மைந்தர்களே....!
தமிழ்த் தேசத்தின் காவல் சிகரங்களே!
யாழ்.மண்ணில் உங்கள் பாதம்படும்
இந்தப் புனித நாளை வருக! வருக!!
என வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

- உரிமையுடன் -
அ.அரியசிவம் - ப.பன்னீர்தாஸன்
வெற்றிலை மார்க்கெட், யாழ்ப்பாணம்.
(2051)

---

# பொதுக்கூட்டம்

வாழ்வகம் - விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லப் பொதுக்கூட்டம் 27.04.2002 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மருதனார்மடம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள புதிய வாழ்வகப் பணிமனையில் நடைபெறும்.

பிரேரணைகள் ஏதும் இருப்பின் 11.04.2002 வியாழக்கிழமைக்கு முன் வாழ்வக முதல்வருக்கு எழுத்துமூலம் அறியத்தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அங்கத்தவர்கள் தவறாது சமுகம் தரவும்.

வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
21.03.002 (1987)
செயலர்,
வாழ்வகம்.

---

# வெளிவந்துவிட்டது !!

பல உள்நாட்டு வெளிநாட்டு கருவி இசைக்கலைஞர்களுக்குப் பாரிய பயனைத்தந்து உள்ளத்தை நெகிழவைத்த

T. K.பிரியனின்

**கருவிகளின் கானங்கள் (பாகம் II)**

(கீழைத்தேய மேலைத்தேய வாத்தியங்களில் சினிமாப் பாடல்களை வாசிக்கக் கூடியதாகும்)

கிடைக்கும் இடங்கள் :

☞ நியூவீனா கானம்.
16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
60, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

☞ நியூ ரிதம்ஸ் 691, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.

---

ACTION CONTRE LA FAIM

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் ஆதரவுடன்
புதிதாக அமைக்கப்பெற்ற
ஐசுபி
விவசாய விளைபொருள்கள்
பதனிடும் நிலையம்
மானிப்பாய் வீதி, உடுவில்.

# மங்களகரமான திறப்புவிழா

## 25-03-2002

காலம்: 10.00 - 12.00மணி சுபவேளையில்.

### நிகழ்ச்சி நிரல்

- ★ மங்கள விளக்கேற்றல்:
- ★ நாடா வெட்டி திறந்து வைத்தல்:
- ★ முதன்மை விருந்தினர்கள்:
  மதிப்பிற்குரிய பிரான் தாதுவர் அம்மையார் மேரி பிரான்ஸ் பக்னியா
  மாண்புமிகு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா அவர்கள்
  (புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர்)
- ★ அமைதி வணக்கம்:
- ★ வரவேற்புரை:
- ★ தலைமையுரை:
  தலைவர்: **திரு.சி.குமாரவேல்**
  (தலைவர், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்)
- ★ முதன்மை விருந்தினர்கள் உரை:
- ★ கௌரவ விருந்தினர்கள்:
  அரசாங்க அதிபர் **திரு.க.சண்முகநாதன்**
  இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, பட்டினிக்கெதிரான நிறுவனம்
  **திரு.பஸ்கல்லைஸ்**
- ★ சிறப்பு விருந்தினர்கள்:
  **திரு.செ.கனகசபாபதி**
  கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.
  **திரு.க.கேதீஸ்வரன** பிரதேச செயலாளர், வலி.தெற்கு
  **திரு.எஸ்.சின்னத்துரை** உதவி விவசாயப் பணிப்பாளர்
  **திரு.எஸ்.சுந்தரேசன**
  உதவி ஆணையாளர், கமநல சேவைத் திணைக்களம்
  **திரு.சி.வி.கே.சிவஞானம்**
  (தலைவர் யாழ். மா. வி. உ. நு. கூ. ச. சமாசம்)
  **திரு.பெ.கனகசபாபதி** (தலைவர் யாழ். மா. கூ. சபை)
  **திரு.சி.சிவமகாராசா** கூட்டுறவாளர்
  **திரு.த.சிதம்பரப்பிள்ளை** தலைவர் கட்டைவேலி, நெல்லியடி பல நோ. கூ. சங்கம்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்

★ நன்றியுரை:

அனைவரையும் இருகரம் கூப்பி வரவேற்கின்றோம்.
பட்டினிக்கு எதிரான நிறுவனம்
சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்.
(C21262)

---

We Serve

# இலவச மருத்துவ முகாம்
## உரும்பிராய் லயன்ஸ் கழகம்

இடம் : வளர்பிறை சனசமூக நிலையம், ஊரெழு கிழக்கு.
காலம் : இன்று (24.03.2002) ஞாயிறு காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை.

☆கண் பரிசோதனை ☆பல் பரிசோதனை
☆சலப் பரிசோதனை ☆பொதுவான நோய்கள்
☆இரத்த அழுத்தம்

பரிசோதிக்கப்பட்டு இலவசமாக கண்ணாடிகள், மருந்துகள் என்பன வழங்கப்படும்.

அனைவரும் வருக! பயன்பெறுக!!

லயன் V.சின்னத்துரை (J.P.) தலைவர் (C21264) லயன் த.திருநாவுக்கரசு செயலாளர்

---

# திருமண மண்டபமும் தங்குமிட வசதிகளும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...
ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.
No:89,Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo - 13
T.P.No.01-433182, 472582
(1243) M.திலகவதி, ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

---

உ

# திருவெண்காடு ஆலவிருட்சம்
## ஸ்ரீ வீரபத்திர சுவாமி சமேத ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்

பாலஸ்தாபன கும்பாபிஷேகப் பெருவிழா

**அடியார்களே!**

இன்று (24.03.2002) ஞாயிறு பங்குனி (10ஆம் திகதி) காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் திருவெண்காடு ஆலவிருட் சம் ஸ்ரீ வீரபத்திர சுவாமி சமேத ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுக்கும் பரிவார மூர்த்தி களான கஜகணபதி, முருகன், ஸ்ரீநாகஈஸ்வரி அம்மன், காளி அம்மன், காளமாமுனி முதலாய தெய்வங்களுக்கு கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறும். அவ்வமயம் அடியார்கள் தேவஸ் தானத்திற்கு வருகைதந்து இறையருளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

12ஆவது K.M.
குடத்தனை, அம்பன்,
வடமராட்சி கிழக்கு.
இயற்கை நேசன் மா.கனகராசா
தேவஸ்தான பரம்பரை அறங்காவலர்

விழா சிறப்புற வாழ்த்துவோர்கள்:

| | | |
|---|---|---|
| கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம் | - | நெல்லியடி |
| துவாரகா வெதுப்பகம் | - | நவிண்டில் |
| சித்தி வெதுப்பகம் | - | தும்பளை |
| ரூப்பி புடைவையகம் | - | நெல்லியடி |
| கணேசன் ஹாட்வெயர் | - | நெல்லியடி |
| சுபாஸ் வெதுப்பகம் (2001) | - | நெல்லியடி |

---

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10
-
07
-
1933



உதிர்வு
26
-
03
-
1999

## திருமதி
## வேலாயுதர் அன்னலட்சுமி

திதி: 24.03.2002

"அறத்தின் சின்னமே" மாண்புமிகு அன்னையே!
மறைந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு என்றும் எம் மனதை விட்டகலாது!
உங்கள் ஆத்மசாந்திக்காக நாம் என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
"பிருந்தாவனம்"
கைதடி வடக்கு,
கைதடி.
(2047)
தற்காலிக முகவரி:
62, செட்டித் தெரு,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரபல கணனித் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமான ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் கனனிக் கண்காட்சி நேற்றுக்காலை ஆரம்பமாகியது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதை முதற் படத்தில் காணலாம். நிறுவன இயக்குநர் கே.விக்னேஸும் அருகில் உள்ளார். துணைவேந்தர் கண் காட்சியைப் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்திற் காணலாம். (ஐ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இன்று குருத்தோலை ஞாயிறை முன்னிட்டு யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

நாளை அதிகாலை 6.30 மணிக்கு முதலாவது திருப்பலியும் காலை 8.30 மணிக்கு 2ஆவது திருப்பலியும் மாலை 5.15 மணிக்கு மூன்றாவது திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட வுள்ளதாக ஆலய பங்குத்தந்தை ஏ.சி.கிறிஸ்தோபர் அடிகளார் தெரிவித்தார். (ஐ-6)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

ஈழத்துக் கல்வாரி என்று அழைக கப்படும் யாழ்.அடைக்கல அன்னை. ஆலயத்தில் இன்று குருத்தோலை ஞாயிறை முன்னிட்டு அதிகாலை 6.30 மணிக்கு முதலாவது திருப்பலியும் காலை 8.00 மணிக்கு 2ஆவது திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும் என்று பங்குத் தந்தை தெரிவித்தார். (ஐ-6)

☆ ☆ ☆

வடமராட்சி,மார்ச்24

பருத்தித்துறை - கட்டைவேலி சேகரத்திலுள்ள மெதடிஸ்த தேவாலயங்களில் இன்று ஞாயிற்றுக் கிழமை குருத்தோலை வழிபாடுகள் இடம்பெறும்.

இவ்வழிபாடுகளுக்கான ஏற்பாடுகளை சேகர பங்குக் குருவான அருட் திரு.செல்வி ஜே.இரத்தினசிங்கம் செய்துள்ளார். (ஐ-173)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

புங்குடுதீவு பாணாவிடை பர்வத வர்த்தனி சமேத இராமலிங்கேஸ்வரப் பெருமான தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-4)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

திருவெண்காடு ஆலவிருட்சம் ஸ்ரீவீரபத்திர சுவாமி சமேத ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8மணிக்கு நடை பெறும். (ஐ-4)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி விநாயகர் ஆலய சிரமதானப் பணியும் பூசை ஒழுங்கு பற்றிய கலந்துரையாடலும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு நடை பெறவுள்ளது. (ஐ-4)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

வண்ணை - கன்னாதிட்டி அருள்மிகு காளி அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி வைபவம் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

திருக்குளிர்த்தியைத் தொடர்ந்து திருநன்னீராட்டலும், விசேட ஆராதனைகளும் இடம்பெறும். (க-7)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மார்ச்24

மூளாய் ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி தேவஸ்தான ஆறாம் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகருக்கான அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து முத்துக்குமாரசுவாமிக்கு அபிஷேகமும், கொடித் தம்பப் பூஜையும், சுவாமி வெளிவீதியுலா வருதலும் இடம்பெறும். (ம-5)

## இசை விழாவில் இன்று

இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3.30 மணிமுதல் நடைபெறவுள்ளன.

மங்களஇசை, வீணைஇசை, குழுப் பாடல், வாத்திய இசை என்பன இடம்பெற்று தொடர்ந்து இணுவில் இளம் தொண்டர் சபையினர் வழங்கும் 'பகத நந்தனார்' இசைநாடகமும் இடம்பெறும். (ஐ-7)

## மறவன்புலோ சகலகலா வித்தியாலய மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்24

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் ஐந்து வகுப்பு மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதற்காக நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள வலயக் கல்விப் பணிமனைகுச் சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் எஸ்.ஞானலிங்கம் கேட்டுள்ளார்.(ம-7)

## தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்24

டிறிபேர்க் கல்லூரியில் கல்வி கற்றுத் தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் ஐந்து வகுப்பு மாணவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பாக கல்லூரியுடன் தொடர்புகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ம-7)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலயத்தில் நூலக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வலய அலுவலகத்திற்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## பிரிவுபசார வைபவம்

சுன்னாகம்,மார்ச்24

ஏழாலை மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற சு.தம்பித்துரையின் பிரிவுபசார வைபவம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும். (ம-27)


**புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு**

நியாயமான விலையில் சுத்தம் செய்து 24 மணிநேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

61, இராமநாதன் வீதி,
(மிலேனியம் பாருக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
(2079)


**பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்**

**யா/செங்குந்த இந்துக் கல்லூரி**

*காலம்* : 28.03.2002 (வியாழன் காலை 9.30)

*இடம்* : கல்லூரி மண்டபம்

பிரேரணைகள், புதிய அங்கத்துவ விண்ணப்பம் 27.03.2002 வரை சமர்ப்பிக்கலாம்.

இந்த அறிவித்தலை அங்கத்தவர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

- செயலாளர்.

(C-21277)

**100 நாள் புரட்சிகர வேலைத்திட்டத்தின் கீழ்**

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர்

**மாண்புமிகு கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனா**

அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும்

வசதி குறைந்தவர்களுக்கான

இலவச மருத்துவ முகாம்
இலவச கண் சிகிச்சை முகாம்
இலவச பற்சிகிச்சை முகாம்
(10வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு)

*காலம்* : நாளை (25.03.2002) திங்கட்கிழமை
*நேரம்* : காலை 9.00 மணி (புதிய நேரம்)
*இடம்* : யாழ்.மத்திய கல்லூரி

*ஆதரவு வழங்குவோர்* :

1. மாவட்டம் 306B, பிராந்தியம் IV, வலயம் II இன் கழகங்கள்
2. கோப்பாய் லயன்ஸ் கழகம் (நிதியுதவி: Lion A.M.தனநாயகம்)
3. H.D.L./HUDEC MCR Project.
4. கியூடெக் (H.U.D.E.C)

(2067)


**ராஜா** யாழ்ப்பாணம்

பார்த்திபன், நந்திதாதாஸ், தேவயானி நடித்த

**அழகி**

வெள்ளி, சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.00
தினசரி: 10.30, 2.30
(C/21126)

**நாகம்ஸ்** சுன்னாகம்

சேது புகழ் விக்ரம், காவேரி நடித்த

**காசி** (நிரம்ப)

காட்சிகள்: 11.00, 3.00 (புதியநேரம்)
29 ஆம் திகதிமுதல்
**ஸ்ரார்**
(2057)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

இன்று மட்டும்
விஜய், மீனா நடிப்பில்

**ராஜகான்**

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)


**தமிழக வித்துவான்களின் சிறப்பு நிகழ்ச்சி**

**தவில், நாதஸ்வரம்**

**மருதனார்மடம் பல்லப்ப வைரவர் கோவிலில்**

**காலம்: இன்று (24.03.2002) ஞாயிறு பி.ப.6.30**

*மருதனார்மடம்.* (2082) - அடியார்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னலிங்கம் செல்லம்மா (மணி)

அல்வாய் வடக்கு, மாறம்புலத்தைச் சேர்ந்த திருமதி அன்னலிங்கம் செல்லம்மா (மணி) நேற்று (23-03-2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சடையர் அன்னலிங்கத்தின் அன்பு மனைவியும் புவனேஸ்வரலிங்கம் (பொறியியலாளர், சுவீடன்), குகனேஸ்வரலிங்கம் (திருகோணமலை), சிவனேஸ்வரலிங்கம், சாந்தி (லண்டன்), ஜெயந்தி (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), சடாச்சரலிங்கம் (ஆசிரியர், இ.த.க.பாடசாலை, கெருடாவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருந்ததி (சுவீடன்), ஜெயகௌரி (திருகோணமலை), தேவதாசன் (லண்டன்), றஜீதா (எழுதுநர், யாழ்.மாநகர சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சோபிதா, பிரிந்தன், நிரஞ்சன், சோபியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாறம்புலம்,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*

தகவல்:
பிள்ளைகள்.
(2078)

## கந்தையா முத்தையா

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முத்தையா நேற்று (23-03-2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சட்டநாதர் - வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகனும் தெய்வராணியின் அன்புக் கணவரும் அருள்நேசன், சிவச்செல்வன், காந்தச்செல்வன், ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2002) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப. 1.00 மணியளவில் திருவடிநிலை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*
(2068)

தகவல்:
திருமதி மு.தெய்வராணி
(மனைவி),
பிள்ளைகள்.

## இளையதம்பி இராசரத்தினம்

வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி இராசரத்தினம் (K.M.P.) நேற்று (23-03-2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் செல்லத்துரை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் தில்லையம்மாவின் அன்புக் கணவரும் விஜயகுமார், விஜயதீபன் (விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராசலட்சுமி, துரைராசா (கனடா), சுந்தரலிங்கம் (கொழும்பு), பூமணி, பாலன், தங்கராசா, உதயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், இராசரத்தினம், மல்லிகாதேவி மற்றும் கமலாதேவி, சற்குருநாதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை கிழக்கு,*
*வேலணை - 2.*
(C/21275)

தகவல்:
இ.விஜயதீபன் (மகன்)

## திருமதி நாகன் வள்ளியம்மை

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகன் வள்ளியம்மை 19.03.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.03.2002) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அ.நாகராசாவின் இல்லத்தில் நடைபெறறு, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*கட்டுடை,*
*மானிப்பாய்.*
(2081)

தகவல்:
நா.பொய்யாமணி
நா.பாலசிங்கம் } மகன்மார்.

## தம்பிஐயா மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய வருமானவரி பரிசோதகர், வவுனியா நகரசபை)

தாவடியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா மாணிக்கவாசகர் நேற்றுமுன்தினம் (22.03.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியராதாவின் அன்புக் கணவரும் சுகந்தன், காலஞ்சென்ற சுயந்தன் ஆகியோரது அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (23.03.2002) சனிக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2, முருகன் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*
(C-21276)

தகவல்:
மா.சுகந்தன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சகல மாவட்டங்களிலும் படையினர் சேவை புரிய வேண்டும்

## ஜனாதிபதி உத்தரவு

ஆயுதப் படையினரை நாட்டின் சகல மாவட்டங்களிலும் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான பிரகடனம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

பயங்கரவாத மற்றும் நாசகார நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கான சட்ட ஒழுங்கு விதியின் கீழேயே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

சபாநாயகர் யோசேப் மைக்கல் பெரேரா தலைமையில் நேற்றுமுன் தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடியபோது அரசின் முதலாவது பணியாக சபாநாயகர் ஜனாதிபதியின் இந்தப் பிரகடனததை அறிவித்தார். (ஐ-6-9)

# மட்டுவில் அம்மன் கோயிலுக்கு விசேட பஸ்சேவை ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்24

நாளை நடைபெறும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித்திங்கள் பொங்கலை ஒட்டி விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சுன்னாகத்தில் இருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும் 775 பஸ் புத்தூர், வண்ணாத்திப்பாலம் ஊடாகவும் -

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 7.30 மணிக்குப் புறப்படும் பஸ் கண்டி வீதி, நுணாவில், கனகம்புளியடி ஊடாகவும் -

கொடிகாமத்தில் இருந்து காலை 9 மணிக்கு புறப்படும் பஸ் நுணாவில், கனகம்புளியடி ஊடாகவும் -

சங்கானையில் இருந்து முற்பகல் 10 மணிக்குப் புறப்படும் பஸ் மருதனார்மடம், கோப்பாய், கைதடி, நுணாவில், கனகம்புளியடி ஊடாகவும் ஆலயத்தை அடையும்.

நாளைய உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3-31)

### காச நோயாளர் தின வைபவம்

கோப்பாய்,மார்ச்24

கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவமனையில் உலக காச நோயாளர் தினத்தை ஒட்டிய நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் எஸ்.யமுனாநந்தன் கலந்துகொள்வார். (ஐ-72)

### நடமாடும் சுகாதார சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்24

நடமாடும் சுகாதார சேவை எதிர் வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி குருநகர் 3ஆம் வட்டாரத்தில் நடைபெறவுள்ளது. (ம-8)

### கைதடியில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

கைதடி மத்திய மருந்தகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மருந்தக நலன்புரி சங்கத்தினர் சிரமதானப் பணியை மேற்கொள்கின்றனர். இச் சிரமதானத்தில் அப்பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு நலன்புரிச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-9)

### தாச்சிப் போட்டி

உடுவில் சிந்து விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

☆ பிற்பகல் 3.30 மணி - சுன்னாகம் கலைவாணி வி.க. எதிர் உடுவில் ஞானப்பிரகாசர் வி.க.

☆ மாலை 4.30 மணி - சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ வி.க. எதிர் உடுவில் உதயசூரியன் வி.க. (ஐ-15)

### அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொக்குகே நாளை மாலை 5 மணிக்கு யாழ்.வருகின்றார். அன்று இரவு 7 மணிக்கு அவர் யாழ் ஆயரைச் சந்திப்பார்.

நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 7மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபடும் அமைச்சர் பின்னர் வேலணைக்குச செல்லவுள்ளார். யாழ்.நாகவிகாரைக்கும் அவர் செல்வார். அதனைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள மணியம் கட்டடத்தில் நடைபெறும் ஹோட்டல் பயிற்சிநெறிப் பாடசாலைத் திறப்பு விழாவில் அமைச்சர் கலந்துகொள்வார்.

நண்பகல் 12.30மணிக்கு காரைநகருக்குச் செல்லவுள்ள அமைச்சர் பிற்பகல் 2.30மணிக்கு காங்கேசன்துறை துறைமுகத்திற்கும், சிமெந்துத் தொழிற்சாலைக்கும் சென்று பார்வையிடுவார். அங்கிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் அமைச்சர் வரணி ஊடாக சாவகச்சேரிக்குச் செல்வார். இறுதியாக யாழ்.நகரப் பகுதியைப் பார்வையிடும் அமைச்சர் புதன்கிழமை காலை கொழும்பு திரும்புவார். (ஐ-10)

### பயணிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைசி நிலைகளுக்கு இடைப்பட்ட வீதிப்பகுதியில் 24 மணிநேரமும் தங்கியிருந்து பணிபுரிவர். இப்பணியில் ஈடுபடும் குழுவினர் பாதைதிறக்கப்பட்டதும் மல்லாவியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்துக்குப் போய்ச்சேர்வர் - என்றும் அவர் தெரிவித்தார்.

ஏ-9 பாதை எப்போது திறக்கப்படும் என்பது பற்றி எதுவும் தெரியாது என்றார் அவர். (ஐ-6-9)

### சித்திரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளதாக பாதுகாப்பு உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் பணி பெரும்பாலும் இரு வாரங்களில் பூர்த்தியாகும் என்றும் அந்த உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் -

முகமாலை, எழுதுமட்டுவாழ் பகுதிகளில் சோதனை நிலையங்கள் அமைக்கும் பணியை செயலக அதிகாரிகள் நேற்று ஆரம்பித்துள்ளதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-3)

### ஈ.பி.டி.பியினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாகவும் -

அவர்கள் முன்னிலையில் ஆயுதங்கள் அனைத்தும் படை அதிகாரிகளிடம் கையளிக்கப்படும் என்றும்-

யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் கே.வி.குகேந்திரன்(ஜெகன்) தெரிவித்தார்.

யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுவினரும் இந்த வைபவத்தில் பங்குபற்றுவர் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

### புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னமும் எதுவும் தெரிவிக்கவில்லை.

அந்த அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சுபத்திரனிடம் இது குறித்துக் கேட்டபோது -

ஆயுதங்களை கையளிக்க நாம் தயார். எமது பாதுகாப்புக்கு முதலில் உத்தரவாதத்தை அரசு தர வேண்டும் என்றார்.

# கண்டி வீதியைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

கொழும்பு,மார்ச்24

வட பகுதிக்கான பிரதான போக்குவரத்துப் பாதையான யாழ். - கண்டி வீதியைப் புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான நிதியுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

தற்போது இந்தப் பாதையை விரைவாகத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் குழு ஒன்று வடபகுதிக்கு விஜயம் செய்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யோன் கொலின் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இலங்கைப் பொருளாதாரம் தொடர்பான கருத்துவேறுபாடுகளுக்கு அப்பால் இந்தப் பாதையின் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொணடே நாம் இந்த விடயத்தை நோக்குகிறோம்.

இந்தப் புனரமைப்பு வேலைகளுக்கு ஆரம்பத்தில் 5லட்சம் டொலர்கள் வழங்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-6-9)

# நல்லூரில் சிறப்புற நடந்த துணைவேந்தரின் மணிவிழா

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையின் மணிவிழா நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நலலூர் துர்க்கா மணிமண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பிற்பகல் 3மணியளவில் நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் முன்றலில் இருந்து மணிவிழா நாயகரும் அவரது பாரியாரும் மங்கல வாத்தியங்கள் சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். அங்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் க.சிவராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில் நல்லை ஆதீன முதல்வர், துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன், அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார், பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர், மூதறிஞர் சொக்கன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், துறைத்தலைவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பல நூற்றுக கணக்கானோர் கலந்துகொண்டனர்.

துர்க்கா மணிமண்டபம் நிறைந்த சனக் கூட்டத்தின் மத்தியில் எண்ணற்ற மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு அழைத்துவரப்பட்ட துணைவேந்தர் தம்பதியினர் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் அமர்ந்திருந்த காட்சி சிறப்பாக அமைந்தது.

முன்னதாக விழாநாயகர் அழைத்துவரப்பட்ட வீதிகளின் இருமருங்கிலும் மக்கள் நிறைகுடம் வைத்து பூமாலைகள் அணிவித்து அவர்களை வரவேற்றனர்.

விழாவின் முடிவில் மணிவிழா மலரும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-4)

### காவல்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

இந்நிகழ்வுகள் நடைபெற்ற மைதானம் சிவப்பு, மஞ்சள் மற்றும் நீல வர்ணக் கொடிகளால் சுற்றிலும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மைதானத்தின் மத்தியில் தமிழீழ தேசியக் கொடியும், தமிழீழக் காவல் துறைக் கொடியும் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தன. மைதான நுழைவாயிலில் தமிழீழக் காவல் துறையின் 10ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் அலங்கார வளைவு ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பாதையின் இருமருங்குக்கும் நூற்றுக் கணக்கான சிவப்பு, மஞ்சள், நீல வர்ணக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. செங்கம்பள விரிப்பு மேடையின் பின்னணியில் பாரிய தமிழீழ வரைபடம் வைக்கப்பட்டு அதன் அருகே தமிழீழத் தேசியக் கொடியும் தமிழீழக் காவல்துறைக் கொடியும் நடப்பட்டிருந்தன. அணிவகுப்பு நிகழ்வில் காவல்துறை உறுப்பினர்கள், காவல்துறை சிறப்புப் படையணியினர் பங்கேற்று சிறப்பித்தனர். அணிவகுப்பு மரியாதையை தலைவர் பிரபாகரன் ஏற்றுக்கொண்ட பின்னர் காவல்துறைப் பொறுப்பாளர் வரவேற்புரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தலைவர் பிரபாவுக்கு தமிழீழக் காவல்துறையினரின் சார்பில் கேடயம் ஒன்றினை வழங்கினார்.

நிகழ்வின் இறுதியில் காவல் துறைப் பொறுப்பாளர் நன்றியுரையாற்றினார்.

ஏனைய நிகழ்வுகள் யாவும் அணிவகுப்பு மைதானத்தில் தனியாக அமைக்கப்பட்ட மைதானத்தில் நீல நிறத்திலான அலங்கார மேடையில் நடைபெற்றன. காவல்துறையின் பத்து ஆண்டுகால மக்கள் சேவையின நிறைவைக் குறிக்கும் முகமாக நூற்றுக்கும் அதிகமான புகைக்குண்டுகள் வானில் பறக்கவிடப்பட்டமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தமிழீழக் காவல்துறையினரின் சேவையைப் பாராட்டி புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உரையாற்றினார்.

☆நோயை நெருங்க விடாது விரட்ட....
☆நோயைத் தடுக்க....
☆நோய்வாய்ப்பட்ட உறுப்புகளினதும் தசைநார்களினதும் சக்தியைத் திரும்பப் பெற்று வலுப்படுத்த....
☆இளமையாகத் தோற்ற....
☆நோயற்ற வாழ்வு வாழ....

மூலிகை உப உணவு!

மூலிகை அரசன் (King Of Herbs) என வர்ணிக்கப்படும் கனடேமா (Ganoderma) என்ற காளானை உபயோகித்து மலேசியாவில் தயாரிக்கப்பட்ட மாத்திரைகள் (Capsules) விற்பனைக்கு வந்துள்ளது.

இந்தியா உட்பட 18 நாடுகளில் இந்த மருந்தைப் பயன்படுத்தியோரின் வெற்றிநடை அதன் சிறப்பையும் தகுதியையும் நிரூபிக்கின்றது.

இக்காளானை உபயோகித்துப் பயனளிக்கப்பட்ட மாத்திரைகள், கோப்பி, பற்பசை முதலியன மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயத் திருவிழாக் காலத்தில் ஆலய சுற்றாடலில் அமைக்கப்பட்டிருக்கும் விற்பனை நிலையத்தில் எதிர்வரும் 29.03.2002 முதல் 15.04.2002 வரை அறிமுகப்படுத்தி விற்பனை செய்யப்படும்.

வந்து, பார்த்து, கேட்டு வேண்டி, பயன்படுத்தி நல்லாரோக்கிய வாழ்வு பெற அழைக்கின்றோம்.

Magnum Investments (PVT) Ltd.,
No.15, Stamboul Place,
Colombo - 03,
Tel.:575753, 074 - 723396.
(C-21212)

IISஇன் மாபெரும் கணனிக் கண்காட்சி
INFOTECH. JAFF - 2001

இன்றைய விசேட நிகழ்வு
உங்கள் கேள்விகளுக்கு எங்கள் பதில்கள்!
கணனி சம்பந்தமான உங்கள் அனைத்துக் கேள்விகளுக்கும்
IIS விரிவுரையாளர்கள் பூரணமாகப் பதில் அளிக்கக் காத்திருக்கிறார்கள்.
அனைவரும் திரண்டு வருக!

காலம் :- இன்று (24.03.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி
பிரவேசம் :- இலவசம்

(C/21269) இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்.

சிமெந்து பாவனையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

நம் நாட்டின் உயர்ரக சிமெந்தான
"அற்லஸ்" சிமெந்தின் மொத்த விலை ரூ.525/- ஆகவும்
அதி உயர்ரக சிமெந்தான
"மிற்சுயி" சிமெந்தின் மொத்தவிலை ரூ.560/- ஆகவும்
விலைகள் குறைக்கப்பட்டுள்ளதென
எமது வாடிக்கையாளர்களுக்கு
மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சிமெந்து இறக்கும் பணி 27.03.2002 புதன்கிழமை ஆரம்பமாவதால் வாடிக்கையாளர்கள் நேரடியாகப் பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

ஜெசிபா ஏஜென்சி,
தொலைபேசி இல.: 2407 (C-21271) 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.